Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

UNIT
PIV 2.4 Complete கணனிகள் மொனிற்றருடன் @ Colombo based price
3 வருட பூரண உத்தரவாதம்
Compaq PIII மொனிற்றருடன் just Rs. 31000/-முதல் 1 வருட உத்தரவாதம்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
வதந்திகளை நம்பி உங்கள் பணத்தை வீணடிக்காதீர்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
Possible which impossible
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 07 (18.03.2005) வெள்ளிக்கிழமை இதழ்:170

# வெளிநாட்டு உதவிகளுக்கு நடந்தது என்ன?

# சந்திரிகாவிடம் கேள்வி எழுப்ப பிரதியமைச்சர்கள் குழு திட்டம்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்த முகாமைத்துவ நிவாரணப் பணிகளுக்கென வெளிநாடுகள் மற்றும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பெருமளவு நிதிக்கு என்ன நடந்தது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேள்வி எழுப்புவதற்கு பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் ஜனாதிபதி சந்திரிகா உரை நிகழ்த்தும்போது – வெளிநாடுகள் அறிவித்த நிதியில் ஒரு சதம்கூட இதுவரை அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், பல நாடுகளும், உதவி அமைப்புக்களும் நிதியுதவிகளை வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளதோடு ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த விடயம் தொடர்பாக உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சர்வதேச நிதியுதவி குறித்து விளக்கமளிக்குமாறு கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்களோடு தொடர்புகளைக் கொண்டுள்ள அமைச் சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெருமளவு நிதியைப் பெற்றுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதியைப் பெற்றவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிடுமாறும் பிரதியமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)


## தெல்லிப்பளையில் இன்று பேரணி!

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளவும் குடியேறுவதற்கு அனுமதிக்க கோரி, இன்று தெல்லிப்பளையில் பேரணியொன்றை நடத்தவுள்ளனர்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும் பொது அமைப்புக்களும் காலை 10 மணியளவில் மல்லாகம் சந்தியில் ஒன்றுகூடி அங்கிருந்து பேரணியாக தெல்லிப்பளை பிரதேச செயலகம் வரை சென்று, பிரதேச செயலரிடம் தமது மகஜரைக் கையளிக்கவுள்ளனர்.

## விண்ணாணம் விநாசியர்



அப்ப உட்கட்சிப் பூசல் வலுக்கப் போகுதெண்டு சொல்லுங்கோ...!

## ஆயுதக்குழு உறுப்பினர் ஒருவர் வெலிகந்தவில் சுட்டுக் கொலை!

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிகந்த பகுதியில் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெலிகந்த பகுதியிலுள்ள தீவுச்சேனை என்ற இடத்தில் – முகாமிட்டு நிலைகொண்டிருக்கும் ஆயுதக்குழுவின் உறுப்பினரான மனோஜ் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தனது இருப்பிடத்திலிருந்து மதுரங்கலவிற்கு நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்ற இவர் மீளத் திரும்பும் போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தப் பகுதியில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த முத்துக்கல் பொலிஸார் மதகு ஒன்றின் கீழ் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தைப் பொறுப்பேற்க இதுவரை எவரும் முன்வரவில்லையென வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.


வாகரையைச்சேர்ந்தமனோஜ்எனப்படும் கந்தையா பத்மராஜா என்ற இந்த இளைஞர் ஒரு வாரத்துக்கு முன்பாகவே தீவுச்சேனையில் தனது மனைவியுடன் வந்து குடியிருந்தார் என்றும் பின்னர் இவரது மனைவி இவருடன் இருக்க விரும்பாமல் சொந்த இடத்துக்குத் திரும்பியதாகவும் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் இந்த இளைஞர் தமது அணியைச் சேர்ந்தவரென கருணாவின் முக்கிய சகாவான மங்கள மாஸ்டர் பொலிஸாரிடம் அடையாளம் காட்டியிருந்தார். இந்தத் தகவலை ஆரம்பத்தில் பொலிஸார் ஊடகங்களுக்கு வெளியிட்டிருந்தபோதும் – நேற்று மாலை ஊடங்களுக்குப் பொலிஸார் வெளியிட்ட தகவலில் கிராமவாசி ஒரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்களை அழிக்க

# ஏவுகணைகளை வழங்குவதற்கு செக்.குடியரசு தயாராக உள்ளதாம்!



(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இருக்கும் விமானங்களைத் தாக்கியழிக்கக்கூடிய ஏவுகணைகளை இலங்கைக்கு வழங்குவதற்கு செக்.குடியரசு முன்வந்திருப்பதாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார்.


விடுதலைப் புலிகளிடம் செக். குடியரசு தயாரிப்பான இரண்டு விமானங்களே இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகளிடம் உள்ள இரண்டு விமானங்களும் எந்த நாட்டிலிருந்து கொள்வனவு செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்புக் குறித்து விரைவில் முடிவு தெரியவரும்!



## கதிர்காமர் பி.பி.சிக்கு பேட்டி

பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் விடயத்தில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிகின்றேன்.

எனவே – நாம் இது தொட ர்பாக சிறிதுகாலம் பொறுத் திருக்கவேண்டியிருக்கும். இது நீண்டகாலமாக இருக்காது. எப்போது பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமென ஒரு காலவரையறையையோ அல்லது திகதியையோ குறிப்பிடமுடியாது என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

லண்டன் சென்றுள்ள அமைச்சர் கதிர்காமர், பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது –

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வே அரசு முன்வைத்துள்ள திட்டத்திற்கு அரசாங்கம் எந்தத்தருணத்திலும் பதிலளிக்கக்கூடும். நான் தற்போது இலங்கையிலிருந்து வந்து ஒரு வாரமாகிறது.

சுனாமி நிவாரணப் பணிகளுக்கென வந்த பொருட்களில் பல தேவையற்றவை அல்லது பயனற்றவை. எதிர்வரும் ஏப்ரல் 26 ஆம் திகதிவரை வெளிநாடுகளிலிருந்து வரும் சகல பொருட்களையும் சுங்கவரியில்லாமல் அனுமதிப்பதெனவும் – ஏப்ரல் 26 ஆம் திகதிக்குப் பின்னர் வேண்டாத பொருட்கள் குறித்த ஒரு பட்டியலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி பிரதிநிதியை விசாரணைக்கு அழைப்பு!

வடக்கு – கிழக்கு குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், பிலிப்பைன்ஸுக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலுள்ள ஆசிய பிராந்தியத்துக்கான உலக வங்கியின் தலைமைக் காரியாலயத்தில், உலக வங்கியின் உயர் அதிகாரிகளை பீற்றர் ஹரோல்ட் சந்திக்கவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில் விபத்தில் இருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

இணுவில் லக்ஷ்மி தியேட்டருக்கு முன்பாக நேற்றிரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் கர்ப்பிணிப் பெண் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இணுவிலைச் சேர்ந்த ந.மனோகரன் (வயது 27) மற்றும் அவரது மனைவியான றஜனி (வயது 27) ஆகிய இருவருமே படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுகாண முடியாத துணைவேந்தர் உடனடியாக பதவி விலக வேண்டும்!

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

மருத்துவ பீட மாணவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வுகாண முடியாத நிலையிலுள்ள துணை வேந்தர் உடனடியாக தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. நேற்று நடைபெற்ற பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமரன் தலைமையில் நடைபெற்ற இச் செயற்குழுக் கூட்டத்தில் உடனடியாக பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென வும் அதில் எடுக்கப்படும் முடிவுகளை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டுமென வும், உடனடியாக பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டி இப் பிரச்சினை தொடர்பாக தெளிவுபடுத்துவதுடன் மருத்துவபீடம் மூடப்படும் அபாயத்திலுள்ளமையைச் சுட்டிக் காட்ட வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத் தீர்மானங்களைச் செயற்படுத்த துணைவேந்தரால் முடியாவிட்டால் உடனடியாக துணைவேந்தர் பதவியை இராஜினாமாச்செய்ய வேண்டுமெனவும் மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டது. இதே வேளை மருத்துவபீட அனைத்து ஆண்டு மாணவர்களுக்குமான விரிவுரைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் மாணவர்கள் தொடர்ந்தும் பல்கலைக்கழகம் முன்பாகக்கூடி தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (94)

## ஜனசக்தி காப்புறுதி கம்பனியின்

அனுசரணையுடன்.....

**வழமைபோல் வருடாந்தம் நடைபெறும் யாழ். மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போர் நேற்று (வியாழக்கிழமை) 17.03.2005 முதல் நாளை (சனிக்கிழமை) 19.03.2005 வரை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.**

(1096)

## பணிநிலைக்கான வேண்டுகை

**கீழ்வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 28.03.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.**

*பணிநிலைகள்*

1) ஆளுகை அலுவலர்
2) எழுதுநர்
3) கணக்குப் பதிவாளர்
4) கணக்காய்வாளர்
5) கணினித் தரவுப் பதியுநர்
6) சிற்றூழியர்

*கல்வித் தகைமைகள்*

| | |
|---|---|
| பணிநிலை : 01, 02 | க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| பணிநிலை : 03, 04 | க.பொ.த (உ/த) தரத்தில் வணிகப் பிரிவில் கணக்கியல். உட்பட 3 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும். |
| பணிநிலை : 05 | க.பொ.த (சா/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனமொன்றில் கணினித் தேர்வில் தேறியிருத்தல் வேண்டும். |
| பணிநிலை : 06 | ஆண்டு 8 கல்வி கற்றிருப்பதுடன் பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும். |

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி
**பொறுப்பாளர்.**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :**
**02.04.2005 காலை 10.00 மணி**

**நேர்முகத் தேர்வு நடைபெறும்இடம் :**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி**
**நாகதம்பிரான் வீதி**
**கிளிநொச்சி.**

**குறிப்பு :**

01. நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிப்பவர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஏனைய சான்றிதழ்கள், அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகளுடன் வருகை தருக.
02. பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிட்டு அனுப்புக.

*ஆளுகை*
*மனிதவள மேம்பாட்டுப் பகுதி.*

(சி-3635)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய பத்திரிகையில் 2 ஆம் பக்கத்தில் பாராட்டுகிறோம் விளம்பரத்தில் சர்வாலயத் தீபம் - 16.02.2005 விநாயகர் விரதாரம்பம் 13.01.2005 நடேசர் ஆத்மா தரிசனம் என தவறாக இடம்பெற்றுள்ளது அதனை,

சர்வாலய தீபம் 16.12.2005 விநாயகர் விரதாரம்பம் 13.01.2006 நடேசர் ஆர்த்ரா தரிசனம் என்பன சரியாக திருக்கணித பஞ்சாங்கத்தில் வெளிவந்துள்ளது எனத் திருத்தி வாசிக்கவும். - ஸ்ரீலஸ்ரீ சுந்தரலிங்க தேசிகர்.

(சி-3910)


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
**லண்டன்**
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
(சி-3859)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜய், சங்கவி
நடித்த
**நிலாவே வா**
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3856)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
விஜய், திரிஷா
பிரகாஷ்ராஜ்
நடித்த
**'கில்லி'**
கா.நே(பு.நே) 10.30 2.30 6.30 9.30
எமது அடுத்த இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான தாவடி மைந்தன் நடிக்கும்
விரைவில் எதிர்பாருங்கள்
**குருதேவா**
(சி-3857)

**மனோகரா** திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில்
சூர்யா, ஜோதிகா
மற்றும் பலர் நடித்த
**மாயாவி**
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், நமீதா, வடிவேலு, கபாலி
நடித்த
**ஏய்**

19.03.2005 முதல்
சுக்கிரன்
. 11.00, 3.00, 7.00, 10.00


# 'மத்தியம் 2004' சிறப்புமலர் வெளியீடு!

சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் நூறாவது ஆண்டு பெருந் துடுப்பாட்ட சிறப்பு மலராக 'மத்தியம் 2004' எனும் நூல் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பரியோவான் கல்லூரி முதல்வர் எஸ்.தனபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (58)

## வாசகர் நோக்கு

### ஆங்கில ஆசிரியராக விரும்புவோரின் தகுதி!

ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் வாசகர் பகுதியில் எழுதியதை வாசித்தேன். முன்னைய நாட்களில் மிகவும் புறக்கணிக்கப்பட்டதாலேயே இன்றும் ஆங்கிலக் கல்வி மிகவும் பின்தங்கியுள்ளது. வன்னியில் பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களே இல்லை. யாழ்ப்பாணத்திலும் சில பாடசாலைகளில் இந்த நிலையே.

தற்போது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக இருப்பவர்களில் பலர் தாங்கள் படிக்கும்போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C தரச் சித்தி பெற்றவர்களே – தங்களால் 4 ஆம் 5 ஆம் வகுப்புக்களுக்குக் கூடக் கற்பிப்பது கடினம் என்பதுடன் எனக்குத் தெரியாததை விளங்காததை எப்படி மாணவர்களுக்கு விளக்கிக் கூறுவது என்கின்றனர். தற்போதைய நிலமை இதுவே.

எனவே போட்டிப் பரீட்சையில் 160 புள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்ததால் அவர்களில் ஆங்கிலத்தில் கூடிய புள்ளி எடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கியதில் தவறு இல்லை.

போட்டிப் பரீட்சையில் 175 புள்ளிகளும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் உள்ளவரைவிட, போட்டிப் பரீட்சையில் 162 புள்ளிகளும் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தியும் பெற்ற ஒருவரையே தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்கள் ஆசிரியர்களாகிக் கற்பிக்கப்போவது ஆங்கில பாடம். எனவே ஆங்கிலத்தில் கூடிய தகுதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதில் தவறு இல்லை.

ஆயினும் போட்டிப் பரீட்சையில் 160 புள்ளிகளுக்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்களில் யாருக்காவது நியமனம் வழங்கப்பட்டிருந்தால் அதனைத் தட்டிக்கேட்கும் உரிமை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு.

ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் போட்டிப்பரீட்சையில் 160 க்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் எல்லோருக்கும் நியமனம் வழங்குவதாக இருந்தால் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் எல்லோரையும் எப்போதோ எடுத்திருக்கவேண்டும். அவர்கள் மிகவும் குறைந்த சம்பளத்துடன் சேவை செய்பவர்கள். ஆனால் அவர்களில் திறமைச் சித்தி C உள்ளவர்களை கூட நிரந்தர ஆசிரியர்கள் ஆக்கவில்லை. அதிவிசேட சித்தி வேண்டும் என்கிறார்கள்.

இதனால் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் ஆங்கில ஆசிரியர்களாக வருவதற்கு முன் ஆங்கிலத்தில் தமது தகுதிகளை உயர்த்திக் கொள்ள வேண்டும். கல்வித் திணைக்களம் எத்தனையோ பரீட்சைகளையும் திறந்த பல்கலைக்கழகம் பல பரீட்சைகளையும் நடத்துகின்றன. இவற்றில் ஒன்றுக்கான பரீட்சைகளில் தோற்றலாம்.

ஆங்கில ஆசிரியர்களாக வரவிரும்புவோர் ஆங்கில மொழியில் தரமான பரீட்சைகளில் தோற்றித் தேர்ச்சி பெற முயற்சி செய்யவேண்டுமே தவிர மற்றப்பாடங்களில் சிறப்புத் தேர்ச்சியைக் காட்டி ஆங்கில ஆசிரியர்களாக வர முயலக்கூடாது!

ஓர் ஆங்கில ஆசிரியை
இ.கோபால்


**PRE CERTIFICATE**
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் வளர்ந்தோருக்கான விசேட ஆங்கில பாடநெறி.

**PRE FOUNDATION**
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் சிறார்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி

**பாடநெறி விதானம் (காலம் 6 மாதம்)**

- அடிப்படை ஆங்கில பேச்சுப்பயிற்சி
- ஆங்கில சொல்வளத்தை மேம்படுத்தல்
- ஆங்கில சொல் பிரயோகம், உச்சரிப்பு
- ஆங்கிலத்தில் உரையாடல்
- ஆங்கில இலக்கண தொழிற்பாட்டை மேம்படுத்தல்
- ஆங்கிலம் எழுத்துக்கூட்டி வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் எழுதப்பயிலுதல்
- பல்வேறு பாத்திரங்களிற்கு ஏற்ப பேசுதல்.



British BUSINESS SCHOOL Where Students Come First
**BRITISH BUSINESS SCHOOL**
NO.140, TEMPLE ROAD, JAFFNA.


## வலி. கிழக்கு வட பகுதி பல.நோ.கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்குத் தகுதியான எமது சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தின் வேலை நாட்களில் ரூபா 10 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர் , வலி கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி என்ற முகவரிக்கு 30.03.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கணக்காளர் | - | சம்பள குறியீட்டு இல 104/09 |
| 2. | களஞ்சியப் பொறுப்பாளர் | - | சம்பள குறியீட்டு இல 202/11 |
| 3. | கிளைமேற்பார்வையாளர் | - | சம்பள குறியீட்டு இல 207/11 |
| 4. | காசாளர் | - | சம்பள குறியீட்டு இல 306/12 |
| 5. | கிளைமுகாமையாளர் | - | சம்பள குறியீட்டு இல 208/14 |
| 6. | கிளைமுகாமையாளர் | - | சம்பள குறியீட்டு இல 208/15 |
| 7. | களஞ்சியப் பொறுப்பாளர் | - | சம்பள குறியீட்டு இல 202/13 |

மேற்படி பதவிக்கான சம்பள விபரங்கள், கல்வித் தகைமை, வயது போன்ற மேலதிக விபரங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*பொதுமுகாமையாளர்*
*வலி கிழக்கு (வ.ப.) ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி*

(சி-3908)

# பொதுக்கட்டமைப்பு உடன்பாடு விரைவில் ஏற்படவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பொதுக்கட்டமைப்பு உடன்பாடு ஒன்று அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மிகவிரைவில் உருவாக்கப்படவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் தொடர்ந்து கூறுகையில் –

அந்தக் கட்டமைப்பில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படவேண்டும். இது தொடர்பாக வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இன்னும் சில விடயங்களில் மட்டுமே இணக்கம் ஏற்படவேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (தே)

## சுனாமி உதவிக்கு நடந்ததென்ன?

# விசாரணை நடத்துமாறு ஐ.தே.கட்சி கோருகிறது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச நிதியுதவிகள் இதுவரை சென்றடையவில்லை. எனவே இந்த நிதியுதவிகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசாங்கம் நீண்ட விசாரணையொன்றை நடத்த வேண்டுமென ஐ.தே.க கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளதாவது –

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென பெருந்தொகையான நிதியுதவி அரசாங்கத்துக்குக் கிடைத்தபோதும் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை சென்றடையவில்லை. இந்த நிதியுதவி தவறான வழியில் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென பொதுமக்கள் சந்தேகமடைகின்றனர்.

இந்த நிதி தவறான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் அநுர பண்டாரநாயக்க கூட வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியிருப்புகள் உட்பட எதனையும், இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை. இதற்குக் காரணம் 100 மீற்றர் என்ற பிரச்சினைதான். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பிரதான வீதிகளில் வைத்துச் சமையல் செய்வது அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காத காரணத்தாலேயே என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பிரமுக வங்கித் தலைவரை கைதுசெய்ய பிடியாணை

## இன்ரபோலுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

பிரமுக வங்கியின் முன்னாள் தலைவர் றோகண பெரேராவை கைது செய்வதற்காக சர்வதேச ரீதியிலான ஆணையை கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை பிறப்பித்துள்ளது.

குறித்த நபர் நாட்டில் இல்லை என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சட்டமாஅதிபர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ததையடுத்தே நீதிவான் உபாலி அபயரட்ண, இன்ரபோலுக்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

றோகண பெரேராவிற்கு எதிராக 217 குற்றச்சாட்டுக்கள் உள்ளன. 1995 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து – 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை இவர் செலான் வங்கியின் பொது முகாமையாளராக இருந்துள்ளார். இதன் பின்னரே இவர் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடி செய்தாரென குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பொருட்களின் விலை அதிகரிப்புக்கு

# கடற்படை காரணம் என்ற குற்றச்சாட்டு நிராகரிப்பு!

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் பொருட்களுடன்வரும் கொள்கலன்களை தாம் பரிசோதனை செய்வதால் ஏற்படும் காலதாமதத்தினாலேயே பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை கடற்படை மறுத்துள்ளது.

இது தொடர்பாக கடற்படைத் தலைமையக பேச்சாளர் கொமடோர் ஜயந்த பெரேரா தெரிவிக்கையில் –

நாட்டுக்குப்பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் பொருட்களுடன் கொள்கலன்களில் கொண்டுவரப்படும் ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் உபகரணங்களைத் தடுக்கும் வகையிலேயே கடற்படையினர் கொழும்புத் துறைமுகத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் கடற்படையினரின் இந்த சோதனை நடவடிக்கையால் பொருட்கள் துறைமுகப் பகுதியிலிருந்து வெளியே செல்வது காலதாமதம் அடைவதாலேயே பொருட்களுக்கான விலைகள் அதிகரிப்பதாகத் தெரிவிப்பதை ஏற்கமுடியாது.

அரசாங்கத்தின் நேரடி உத்தரவின் அடிப்படையிலேயே கடற்படையினர் இந்த முக்கிய பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பணி தொடர்ந்து மேற் கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# தேர்தலில் அரைப்பகுதி வாக்குகள் ஜே.வி.பிக்கே விழுந்ததாம்!

## சோமவன்ச சொல்கிறார்.



(கொழும்பு)

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு நாடாளுமன்ற தேர்தலில் விழுந்த வாக்குகளில் அரைவாசியைப் பெற்றுகொடுத்தது ஜே.வி.பியே. இதனை மறந்ததால் தான், நாட்டின் நிர்வாகம் சீரழிந்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நேற்றுமுன்தினம் நடந்த் கட்சியின் கொழும்பு மாவட்ட கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

1973 ஆம் ஆண்டு ஜே.வி.பி முன்வைத்த கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று வடக்கு – கிழக்கு யுத்தம் ஏற்பட்டிருக்கமாட்டாது. தனியார் வங்கி ஒன்றின் தலைவர், தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா போன்றோரிடம் இலங்கையின் நிர்வாகத்தை வழங்க வேண்டுமென்று தெரிவித்ததையும் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச இங்கு உரையாற்றுகையில் – சர்வதேசம் நாட்டைத் துண்டாட முயற்சிக்கும் நிலையில் அதனை ஜே.வி.பி முறியடிக்கும் என சூளுரைத்தார். (தே)

# கடற்படை வாகனம் மோதி மூவர் பலி –7 பேர் காயம்!

(கொழும்பு)

பேருவளையிலிருந்து – கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த வான் – வத்தளையில் கடற்படையினரின் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த மூவர் உயிரிழந்ததுடன், 7 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒன்றரை வயதுக் குழந்தையும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## மகிந்த – ரணில் விரைவில் சந்திப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அடுத்த வாரம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்புச் சபையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து புதியவர்களின் நியமனம் தொடர்பாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

# சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து விலகினார்!

(கொழும்பு)

சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.டி. மித்திரரத்ன கடந்த 15 ஆம் திகதி முதல் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவர் தனது பதவி விலகல் கடிதத்தை சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பிவைத்துள்ளார்.

எனினும் தனது பதவி விலகலுக்கான காரணத்தை மித்திரரத்ன தெரிவிக்கவில்லை என்றும் – அமைச்சருக்கும் அவருக்குமிடையே ஏற்பட்ட அபிப்பிராயபேதமே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்களாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய இவரின் பதவிக்காலம் இந்தவருட முடிவில் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

## திருக்கோவிலில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட காயத்திரி கிராம மக்கள் தமக்கு நிவாரணம் வழங்கக் கோரி நேற்றுமுன்தினம் திருக்கோவில் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இவர்கள் தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி பிரதேச செயலரிடம் மனுவொன்றையும் கையளித்தனர்.

இந்த மனுவை அரச அதிபருக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலர் கே.தவராஜா உறுதியளித்தார்.

## எம்.பியை கைதுசெய்யுமாறு பிடியாணை

(கண்டி)

கண்டி மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கேனலிய ரம்புக்வல்லவை கைதுசெய்யுமாறு, கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. இஸத் தீன் நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இவர் சம்பந்தப்பட்ட வாகன மோசடி வழக்கொன்றில் பிரதிவாதிகள சார்பில் சாட்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பல வழக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதாலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

## ஆயுதக்குழுவை வெளியேறுமாறுகோரி

# வெலிகந்த வாசிகள் சவப்பெட்டிகளுடன் மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் மறியல்

(பொலநறுவ)

பொலநறுவ – வெலிகந்தப் பிரதேசத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கும் ஆயுதக் குழுவை அங்கிருந்து வெளியேற்றுமாறுகோரி அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் செவனப்பிட்டியவில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு – கொழும்பு வீதியிலுள்ள செவனப்பிட்டிய சந்தியில் இந்த வீதி மறியல் போராட்டம் நடைபெற்றதால் நேற்றுப் பிற்பகல் வரை அந்த வீதி வழியான அனைத்துப் போக்குவரத்துகளும் தடைப்பட்டிருந்தன. கடந்த திங்களன்று கெரபொல கிராமத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத இராணுவ சீருடை தரித்த ஆயுதக் குழுவொன்றினால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்குத் தமது பகுதியிலுள்ள தீவுச்சேனையில் பதுங்குகுழி அமைத்து முகாமிட்டுள்ள ஆயுதக்குழுவொன்றே காரணம் என்றும், இதுபற்றி இராணுவம் பொலிஸ் மற்றும் ஆளும்கட்சி அமைச்சரான மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அறிந்திருந்தும் மௌனம் சாதித்து வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களை அவர்களின் இல்லங்களிலிருந்து ஊர்வலமாக எடுத்துவந்து, கெரபொல மற்றும் முத்துக்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நடத்திய இந்த வீதிமறியல் போராட்டத்தில் சகல இன மக்களும் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பிரேதப்பெட்டிகளுடன் இந்த வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் குறிப்பிட்ட ஆயுதக் குழுவினரால் தொடரும் இந்தப் படுகொலைகளுக்கு எதிராகத் தமது கண்டன உணர்வுகளை வெளிப்படுத்தியதாகவும், இந்தக் குழுவினர் வெளியேற்றப்பட்டால் தங்கள் பிரதேசத்தில் தொடரும் அப்பாவிகள் படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி கிடைக்கும் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## துப்பாக்கிச் சூட்டில் இன்ஸ்பெக்டருக்கு தொடர்பு?


கடந்த மாதம் 17 ஆம் திகதி புளொட் அமைப்பின் உறுப்பினர் மரபாபு என அழைக்கப்படும் (சன்னதி – பாக்கியநாதன்) என்ற இளைஞர்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி சம்பந்தப்பட்டாரா அல்லது அவரது கைத்துப்பாக்கி சம்பந்தப்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிவதற்காக தடயவியல் புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

### வடக்கின் பெரும் போரில்

# சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 9 விக்கெட் இழப்புக்கு 216 ஓட்டங்கள்!





98 ஓட்டங்கள் பெற்ற மயூரன்

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான 99ஆவது வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் போட்டியில்- முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாம்நாள் ஆட்டநேரமுடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவர், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களாக தினேஷ், நேசவர்மன் ஆகியோர் களமிறங்கினர்.

மதியம்வரை 30 ஓவர்களை எதிர்கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து மதிய இடைவேளையின் பின்னர் துடுப்பெடுத்தாடி, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து மயூரன், கஜரூபன் ஜோடி சேர்ந்து முதலாம்நாள் ஆட்டநேரமுடிவில் 91 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது.


இதில் அ.மயூரன் ஆட்டமிழக்காமல் 98, டினேஷ் 18, சகிந்தன் 15, கஜரூபன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும், நேசவன் 7, அன்புயன், மதன்ராஜ், நிரூபன் ஆகியோர் தலா 4 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி வீரர் தயா 20 ஓவர்களில் 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரது 20 ஓவர்களில் 6 மெடின் ஓவர்கள். மதுப்பிரியன் 18 ஓவர்களில் 55 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரது 18 ஓவர்களில் 4 மெடின் ஓவர்கள். வியாசகன் 22 ஓவர்களில் 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். 22 ஓவர்களில் 6 மெடின் ஓவர்கள். மயூரன் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இரண்டாம் நாள் வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டி இன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் இந்தப் போட்டியில் மயூரன் சதமடிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இவர் சதமடித்தால் வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் போட்டியில் 18ஆவது சதமடித்த வீரர் என்ற பெருமையைப் பெறுவார். (58)

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு முதல் நகர்த்தி வெள்ளையினை 5 நகர்த்தல்களுக்குள் Check mate ஆக்குவதற்கு செய்யவேண்டிய நகர்த்தல்களைத்தருக.

*(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... Qc8+! 2.. Qxe8 Nb3+ 3.. Kf1 Rf2 Check mate.

தொகுப்பு - சி. வித்தியாதரன்.



## கவாஸ்கரை முந்தினார் ராகுல் ராவிட்


(கொல்கத்தா)

கொல்கத்தா டெஸ்டில் ராகுல் ராவிட் சதமடித்ததன் மூலம் ஈடன் கார்டன் மைதானத்தில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் கவாஸ்கர், வெங்சர்க்கார் இருவரையும் முந்தியுள்ளார். இவர் 650 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். முதல் இடத்தில் அசாருதீன் (860), இரண்டாவது இடத்தில் லக்ஷ்மன் (762) உள்ளனர். பட்டியலில் முதல் 12 இடங்களையும் இந்திய வீரர்களே பிடித்துள்ளனர்.

| வீரர் | போட்டி | ஓட்டங்கள் | அதிகபட்சம் | சதம் |
|---|---|---|---|---|
| அசாருதீன் | 7 | 860 | 182 | 5 |
| லக்ஷ்மன் | 7 | 762 | 281 | 2 |
| ராவிட் | 7 | 650 | 180 | 2 |
| வெங்சர்க்கார் | 7 | 645 | 157 | 2 |
| கவாஸ்கர் | 8 | 583 | 182 | 2 |

### கொல்கத்தா டெஸ்ட் போட்டி

# வலுவான நிலையில் பாகிஸ்தான் இந்திய வீரர்கள் பெரும் திணறல்!




(கொல்கத்தா)

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வீரர்கள் நிதானமாக நின்று பிடித்து ஆடியதால், 2 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்கள் பெற்று பலமான நிலையிலுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றுவரும் 2 ஆவது டெஸ்ட்டில், முதலில் விளையாடிய இந்தியா முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 344 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சால் விக்கெட்டுக்கள் எளிதில் சரிந்தன. தினேஷ் கார்த்திக் மேலும் ஓட்டமெதையும் எடுக்காமல் 28 ஓட்டங்களுடன் ரன்




அவுட்டானார். அதைத் தொடர்ந்து பாலாஜி 3 ஓட்டங்களுடன் அப்ரிடியின் பந்திலும், பதான் 8 ஓட்டங்களுடன் கனேரியா பந்திலும் ஆட்டமிழந்தனர். இதனால் இந்தியா 9 விக்கெட்டுக்கு 363 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

கடைசி விக்கெட்டான ஹர்பஜன்சிங் - கும்ளே ஜோடி பாகிஸ்தான் பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஆடியது. இந்த ஜோடியைப் பிரிக்க பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் சற்று தடுமாறினார்.

108.5 ஆவது ஓவரில் இந்திய அணி 400 ஓட்டங்களைத் தொட்டது.

கடைசியில் இந்த ஜோடியை அப்துல் ரசாக் பிரித்தார். இந்தியா 111.1 ஆவது ஓவரில் 407 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸை ஆடியது. சயிட் அப்ரிடியும் தௌபீக் உமரும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். மதிய உணவு இடைவேளையின் போது, பாகிஸ்தான் 5 ஓவர்களில்



விக்கெட் இழப்பின்றி 17ஓட்டங்களை எடுத்திருந்தது. அப்ரிடி 16 ஓட்டங்களுடனும் தௌபீக் உமர் ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆடிக்கொண்டிருந்தனர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு ஆட்டம் தொடங்கி, 2ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் பாகிஸ்தான் தொடக்க ஜோடி பிரிந்தது. அப்ரிடி 21 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 29 ஓட்டங்களில் இர்பான் பதானின் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் அடித்த பந்தை டெண்டுல்கர் பிடியெடுத்தார். அப்போது ஸ்கோர் 35 ஆக இருந்தது.

2 ஆவது விக்கெட்டுக்கு தௌபீக் உமருடன் யூனுஸ்கான் ஜோடி சேர்ந்தார்.

தமிழக வீரர் பாலாஜி தனது சிறப்பான பந்துவீச்சால் இந்த ஜோடியைப் பிரித்தார். ஸ்கோர் 70 ஆக இருந்த போது தௌபீக் உமர் பாலாஜியின் பந்தை தூக்கி அடித்தார். தலைக்கு மேல் சென்ற பந்தை ஹர்பஜன்சிங் துள்ளிக்குதித்து மிகவும் அபாரமாக பிடியெடுத்தார். தௌபீக் உமர் தன்



பங்குக்கு 18 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து யூசுப் யுகானா, யூனுஸ் கானுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்திய அணியின் பந்துவீச்சை அடித்து விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இருவரும் அபாரமாக விளையாடினர்.

சிறப்பாக விளையாடிய யூனுஸ்கான் 69 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார். அவரைத் தொடர்ந்து யுகானாவும் 71 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார்.


இதனால் பாகிஸ்தான் அணியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. இந்த இருவரது விக்கெட்டையும் பிரிக்க இந்திய கப்டன் பந்துவீச்சை அடிக்கடி மாற்றிப் பார்த்தார். ஆனால் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

பாகிஸ்தான் அணி 34.3 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட்டது. 48.3 ஓவரில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

யூனுஸ்கான் சதமடித்தார். அதனைத் தொடர்ந்து யுகானாவும் சதம் அடித்தார்.

இரண்டாம் நாள் ஆட்டம் முடியும் கடைசி ஓவரில் 10 ஓட்டங்களை அடித்து யுகானா சதம் பெற்றார்.

2 ஆவது நாள் ஆட்டமுடிவில் பாகிஸ்தான் 2 விக்கெட் இழப்புக்கு



273 ஓட்டங்களைக் குவித்துள்ளது. யூனுஸ்கான் 108 ஓட்டங்களுடனும் யுகானா 101 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

இந்தியாவை விட 134 ஓட்டங்கள் பாகிஸ்தான் பின்தங்கியுள்ளது. கைவசம் 8 விக்கெட்டுக்கள் உள்ளன.

இன்று 3 ஆவது நாள் ஆட்டம் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

## விளையாட்டு

# இந்திய அணியின் நெருக்கடியை பயன்படுத்துவது அவசியம்!

### இம்ரான்கான் ஆலோசனை



(கராச்சி)

பாகிஸ்தான் வீரர்கள், இந்திய அணியின் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்வது நல்லது என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா டெஸ்ட் முதல்நாள் ஆட்டத்தின் பின் கருத்து வெளியிட்ட அவர் -

டெஸ்ட் தொடரைப் பொறுத்தவரை, பாகிஸ்தானைவிட பல விதங்களிலும் இந்திய அணி பலமானதாகத் திகழ்கிறது. இது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். ஆனால், பலமான அணியாகத் தன்னை மொஹாலியில் நிரூபிக்க இந்தியாவால் முடியவில்லை. ஆகவே, கொல்கத்தாவில் வென்றே தீரவேண்டும் என்ற முடிவில் இந்திய கிரிக்கெட் அணி களமிறங்குகிறது.

ஒரு விதத்தில் அவர்களுக்கு இது நிர்ப்பந்தம் மாதிரி. ஆகவே, பாகிஸ் தான் வீரர்கள் இந்திய அணியின் இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது. பாகிஸ்தான் அணியின் முதல்நாள் ஆட்டத்தைப் பார்த்தபோது மீண்டும், மீண்டும் ஒரே தவறை அவர்கள் தொடர்ந்து செய்வதைப் புரிந்து கொள்ளமுடிந்தது.

உதிரிகள் அதிகமாக வழங்குவது, களத்தடுப்பில் நழுவல்கள் இந்த இரண்டும்தான், அவர்களது பலவீனம். அணியின் பயிற்சியாளர் வூல்மர் இந்தத் தவறுகளைத் திருத்த வேண்டும்.

அதேசமயம், வூல்மரைவிட அதிக பொறுப்பு கப்டன் இன்சமாமுக்கு இருக்கிறது. நழுவவிடப்படும் வாய்ப்புக்களின் மதிப்பு அவருக்குத் தெரியும். ஆகவே, வீரர்களிடம் அவர் சற் றுக் கடுமையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்விவளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுதுறையின் ஆதரவுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமம் லீக் மாவத்தை அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகமும் -

4.15 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் சென்.தோமஸ் அணியை எதிர்த்து கல்வயல் விநாயகர் அணியும் மோதவுள்ளன.

# துரைவிஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சு, கவிதைப் போட்டிகள்

கொழும்புக் கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவடைகின்றமையை முன்னிட்டு, கழகத்தின் வெள்ளிவிழா எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த விழாவை ஒட்டி அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சு, கவிதை போட்டிகளைக் கொழும்புக் கம்பன்கழகம் நடாத்தவுள்ளது.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். 25 வயதுக்கு உட்பட்டோர் – சென்ற விழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றவர்கள் தவிர எவரும் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் – முழு வெள்ளைத் தாளில் பெயர், பால், கலந்துகொள்ளும் போட்டி, பிறந்த திகதி, முகவரி, மாவட்டம், கல்வி கற்கும், கற்ற பாடசாலை அல்லது பல்கலைக் கழகம் ஆகிய விபரங்களை எழுதி, கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது கிராமசேவகர் ஆகியோரிடம் தம் தகைமைகளை உறுதிப்படுத்தி, கடித உறையின் மேல் –கலந்து கொள்ளும் போட்டியின் பெயரைக் குறித்து, செயலாளர் –கொழும்பு கம்பன் கழகம் –11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு –6 எனும் முகவரிக்கு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி கிடைக் க்த்தக்கதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

இந்தப் போட்டிகளில் இனங்காணப்படும் விசேட திறமையுள்ள இளைஞர்களுக்கு, கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும். ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் – நடைபெற இருக்கும் கம்பன் விழா மேடையில் அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த தங்க, வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்கு – போட்டி பற்றிய முழு விபரங்களும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்கள் வேண்டுவோர் 2360525 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

# சிறுகதைப் போட்டியில் ஆசிரியருக்கு முதலாமிடம்;



கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சால் 2004 ஆம் ஆண்டில் அரச சேவையாளர்களுக்காக நடத்தப்பட்ட சிறுவர் கதை ஆக்கத்திறன் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 10 ஆக்கங்களில் முதலாமிடத்துக்குரிய பரிசும், சான்றிதழும் கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய ஆசிரியை பாலசுகந்தா கந்தசாமிக்குக் கிடைத்துள்ளது.

இவருக்குரிய பரிசு மற்றும் சான்றிதழை கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கடந்த திங்கட்கிழமையன்று செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கினார். (13)

# அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியினர் நடத்தும் 'சுனாமிக்கு பின்பான அரசியல் நிலையும் சர்வதேச நாடுகளின் தலையீடும்' எனும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கு நாளை மறுதினம் மாலை 3.30 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுசங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் – கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர் க.தணிகாசலம், மனிதநேய தொழிற்சங்க செயற்பாட்டாளர் மு.தியாகராஜா ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

# வேலணை பிரதேச விளையாட்டு விழா

(வேலணை)

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா– நாளை வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேலணை உதவி பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் – பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினராக வேலணைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆர்.யாழ்நம்பியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் ஆண், பெண் இருபாலாருக்குமான 100 மீ, 400 மீ, 800 மீ, 4x100மீ, 4x400 மீ அஞ்சல் மற்றும் ஆண்களுக்கான குண்டெறிதல், பெண்களுக்கான தட்டெறிதல், இறுதி நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

இடைவேளை நிகழ்ச்சிகளாக – வேலணை கராட்டி சம்மேளன மாணவர்களது கராட்டி கண்காட்சியும், புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக் கழகம் – எதிர் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டமும் இடம்பெறவுள் ளன.

இறுதியாக பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. (113)

# மணல் ஏற்றிவந்த லொறி பொலிஸாரால் தடுத்து வைப்பு

நள்ளிரவுவேளை மணல் ஏற்றி வந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவு பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின் போது கோப்பாய் சந்தியிலிருந்து இருபாலை வீதியூடாக புறப்பட்டுச் சென்ற லொறியை பொலிஸார் நிறுத்துமாறு கோரியுள்ளனர்.

லொறிச் சாரதி லொறியை நிறுத்தாது வேகமாக ஓட்டிச் சென்ற வேளை பொற்பதி காளி கோயில டிப் பகுதியிலுள்ள வீட்டு மதில் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

லொறியிலிருந்த சாரதியுடன் ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். விபத்துக் குள்ளான வீட்டினது மதில் முற்றாக சேதமடைந்துள்ளது. பொலிஸார் லொறியை மணலுடன் மீட்டு வந்து தடுத்து வைத்துள்ளனர். (82)

# கோடா வைத்திருந்தவருக்கு அபராதம் விதிப்பு

குடத்தனை துன்னாலையைச் சேர்ந்த ஒருவர் கசிப்பு வடிப்பதற்கான கோடா 96 கிராம் வைத்திருந்த குற்றத்துக்காக நெல்லியடிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் பருத் தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த பருத்தித் துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம், குறிப்பிட்ட நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறினால் 8 மாதகால சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

மேலும் துன்னாலை மேற்கைச் சேர்ந்த இன்னுமொருவர் கசிப்பை வைத்திருந்த குற்றத்துக் காக ரூபா 10 ஆயிரம் தண்டப்பண மாகச் செலுத்தும்படியும் தீர்ப்பு வழங்கப் பட்டது. (12)



பருத்தித்துறை பிரதேசத்தில் சேவையாற்றும் கிராம மட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுத் தொண்டர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் சைக்கிள்களை வழங்கும் நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலருடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுத் தொண்டர்களைப் படத்தில் காணலாம். (17)

# நெடுந்தீவில் பரவிவரும் செங்கண்மாரி நோய்

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக செங்கண்மாரி நோய் பரவி வருவதாக, நெடுந்தீவு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நிலவும் கடும் வெப்பத்தால் இந்த நோய் பரவி வருவதாகக் கூறப்படுகிறது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் பெரும் பகுதிகளுக்கு குழாய் மூலமே குடிநீர் வழங்கப்படுவதால், விநியோகக் கிணறுகளுக்கு குளோரின் இடுமாறு நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு வைத்திய அதிகாரி அறிவித்துள் ளார்.

செங்கண்மாரி நோய் பரவுவதைத் தடுப்பதற்கேற்ற வழிமுறைகளை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பதுடன், நோய் தொற்றுக்குள்ளானவர்கள் அதற்குரிய முறையில் உரிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பங்குனி உத்தர இலட்சார்ச்சனை

(கோண்டாவில்)

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனையும், விஷேட திரவ்வியஹோமமும் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதேவேளை 24 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாட்டுடன், 1008 சங்காபிஷேகமும், பௌர்ணமி திருவிளக்குப்பூசையும் நடைபெற்று – வெள்ளிக்கிழமை நண்பகல் மகேஸ்வர பூசையும், மாலை சிவகாமி அம்பாள் திரு வீதி உலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்றும், நாளையும் பிற்பகல் 3 மணிக்கு வேலணை மத்தியகல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன .

இறுதி நாள் நிகழ்வன்று பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்ளவுள்ளார்.

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு மருந்து

எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 – 10.30 மணிவரை – கிழவி தோட்டம் சனசமூக நிலையத்திலும், காலை 11 – 12 மணிவரை தச்சை ஐங்கரா நெசவுசாலை முன்றலிலும், 1 – 3 வரை கரவெட்டி மத்தி சிந்தாமணி சனசமூக முன்றலிலும் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இந்தப் பகுதியைச் சேர்ந்தோர் அன்றைய தினம் வளர்ப்பு நாய்களையும், கடந்த முறை தடுப்பு மருந்து ஏற்றியபோது வழங்கப்பட்ட பதிவு அட்டையையும் கொண்டு வருமாறு பொதுச் சுகாதாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## முச்சக்கரவண்டி கையளிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்டு ஊனமுற்று இருந்த இரண்டு மாவீரர்களின் தந்தையாகிய சுப்பர்மடம் பருத்தித்துறையைச் சேர்ந்த குருநாதபிள்ளை நடராசா என்பவருக்கு முச்சக்கரவண்டி ஒன்று கடந்த திங்கட்கிழமை வடமராட்சி அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதனை மாவீரர் குடும்பநலன் காப்பகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த முச்சக்கர வண்டியை, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் வழங்கிக் கௌரவித்தார். (12)

# சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் சிறுவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதி மூலம் – சிறுவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் – சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் ரி.ஈஸ்வரன், தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஏ.கைலாயபிள்ளை ஆகியோர் கௌரவவிருந்தினராகக் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் – சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியில் நூறு சிறுவர்களின் பெயரில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து, கணக்குப் புத்தகம் வழங்கப் படும். அத்துடன், சமுர்த்தி கொடிதின நிதிக்கு பங்களிப்பு செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. (24)

# சங்கீதசபை நடத்தும் செய்முறைப் பரீட்சை

வடஇலங்கை சங்கீத சபையால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான பரீட்சையில், தரம் 1 முதல் 4 வரையான மாணவர்களின் செய்முறைப் பரீட்சை ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் – 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தப்பரீட்சை – யாழ்ப்பாணம், கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, கண்டி, மன்னார், மல்லாவி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

வட இலங்கை சங்கீதசபையின் பரீட்சைக்கு - சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், நாடகமும் அரங்கியலும், பண்ணிசை ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் செய்முறைப்பரீட்சையில் தோற்றலாம்.

அதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, யாழ்ப்பாணம், கல்முனை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை – ஜூன் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாக, வடஇலங்கை சங்கீதசபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : செ.லஷ்சிகா
முகவரி : நவிண்டில்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்




# முகம் பார்க்கும் கண்ணாடி மனம்

மனிதனின் மனதைப் பிடிப்பதற்கு முகத்தைவிட, ஒரு தெளிவான புத்தகம் உலகில் எதுவும் கிடையாது. வெளியில் என்னதான் சந்தோஷமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும், மனதளவில் ஒருவர் சோகமாக இருந்தால், அது முகத்தில் தெரிந்துவிடும்.

மனதில் சந்தோஷம் பொங்கும் நிகழ்ச்சி ஏதாவது நடந்து விட்டால், சம்பந்தப்பட்டவரது முகத்தைப் பார்க்க வேண்டுமே தனிக் களை குடி வந்துவிடும்.

முகம் அழகாக இருக்க மனம் சந்தோஷமாக இருப்பது அவசியம்!

ஒருவன் நம்பிக்கை இழந்து கவலையோடும், நோயால் பாதிக்கப் படும்போதும், பிரச்சினை தானாகவே காணாமல் போய்விடுகிறது. என்னதான் முயன்றாலும் முகத்தையும், மனதையும் தெம்பாக வைத்துக் கொள்ள முடியாது. ஒருவர் எப்போதும் இதேமனநிலையில் இருந்தால், வெகு விரைவிலேயே சிடுமூஞ்சியாகி விடுவார்கள். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவார்கள். ஒருவித பிடிப்பற்ற தன்மையோடு வாழ்க்கையைத் தொடருவார்கள்.

**மனதின் கண்ணாடி**

என்னதான் முகத்துக்கு மேக்கப் போட்டாலும், மனம் உற்சாகம் இல்லாமல் இருந்தால் முகம் அழகாகத் தெரியாது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது வெறும் பழமொழி அல்ல. இது நூற்றுக்கு நூறு வீத அனுபவ வார்த்தை.

அறிவியலின் படி மனித உடற் கூறு – நரம்பு மண்டலத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஐம்புலன்கள் மூலம் வெளியுலகத் தகவல்கள் மூளைக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் ஐம்புலன்கள் மூலம் வெளியிடப்படுகிறது. கேட்டல், பார்த்தல், சுவாசித்தல், நுகர்தல், பேசுதல் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான உறுப்புக்கள் காணப்படுவதும் முகத்தில் தான்.

மனம் அனுபவிக்கும் உணர்வுகளை முகம் பிரதிபலித்துக் காட்டுகிறது. அதேபோல உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படும் போது, மனமே அதைக் கண்ணீராக வெளிக்காட்டுகிறது.

மனஅழுத்தமும், மனஉளைச்சலும் அதிமாகும்போது, முடியின் வளர்ச்சியும் கூட பாதிக்கப்படுகிறது. முடி உதிர ஆரம்பிக்கிறது. தலை முடிக்கு நிறத்தைக் கொடுக்கும் நிறம் முடியின் வேர்க்கால் பகுதியில் காணப்படுகிறது. மெலனின் என்ற இந்த மனஅழுத்தம் உளைச்சல், சோர்வு காரணமாக சுரப்பது குறைகிறது. இதனால் முடி நரைப்பதுடன், உதிரவும் செய்கிறது.

இந்தப் பாதிப்புகளால் முக அழகு பொலிவிழந்து போகிறது. மாறாக உடலும், மனமும் ஆரோக்கியமாகஇருந்தால் முகப் பௌர்ணமி நிலவு போல ஜொலிப்பதுடன், சருமமும் பளபளக்கிறது. குறிப்பாக – பெண்கள் தான் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். அன்றாட வாழ்வில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் ஏராளம். அவற்றில் ஓரிரண்டைத்தான் வெளியில் சொல்ல முடியும். பலதை யாரிடமும் சொல்லமுடியாது. உள்ளுக்குள்ளேயே வைத்து புழுங்கிக் கொண்டிருப்பாள். இதன்விளைவாக நாற்பது வயதாகும் போதே பல பெண்களுக்கு முகம் – சுருக்கம் விழுந்து வயதான தோற்றத்தைத் தந்துவிடுகிறது.

எப்போதும் பிறரை நம்மோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. இருப்பதைக் கொண்டு திருப்தியாக, மகிழ்ச்சியாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். யாருக்காகவும் போலியாகச் சிரிக்காதீர்.

**முக அழகு வசீகரம் பெற**

✷ பிரச்சினைகள் ஏற்பட்டால் அதிலேயே மூழ்கிக்



கிடக்காமல், சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அது உங்கள் மனப்பலத்தை அதிகமாக்குவதோடு. முகத்தில் கம்பீரத்தை வரவழைக்கும்.

✷ தோல்வி என்பது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத விடயம். தொடர்ந்து தோல்வியே ஏற்பட்டால் துவண்டு போகாமல், மீண்டும் மீண்டும் முயற்சி செய்யவும் நம்பிக்கை ஒளிதெரியும்.

✷ மனம் சோர்ந்துபோனால், நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசலாம். நண்பர்களிடம் மட்டும்தான் எவ்வளவு மோச மான விடயமாக இருந்தாலும் பகிர்ந்து கொள்வதால்தான் மகிழ்ச்சி பெருகுகிறது.

✷ வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்ற பழமொழிக்கு இணங்க, சிரித்துவாழப் பழகுங்கள். சிரிப்பதற்கு நாம் பெரும் பணத்தைச் செலவிடத் தேவையில்லை.

✷ சிரிப்பே நோய்க்கான மருந்து. மருந் தைக் கையில் வைத்துக்கொண்டு, கடை கடையாய் ஏறியிறங்கவேண்டாம்.

✷ மற்றையவர்கள் செய்யும் வேலையை மனமாரப் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள். எரிச்சலோடு சிடு சிடுப்பாக யாரையும் வரவேற்காதீர்கள். சிரித்த முகமே உறவை நீடிக்கச் செய்யும்.

✷ மனதில் பாரத்தைக் குறைக்கவும், புதிய அனுபவங்களைப் பெறவும் – இயற்கை எழில்பொங்கும் மலைப்பிரதேசங்களையோ, நீரேரிகளையோ, சுற்றுலாத் தலங்களையோ தேடிச் செல்லுங்கள்.

# மனமே! மீண்டெழுவாய்



போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.

மனமே! உன் மனைவியின் கையைப் பிடித்து பேரலைக்குத் தப்பி ஓடிக்கொண்டிருக்கையில், வெள்ளம் உன்னைச் சூழ்ந்து உதைத்தபோது மரத்தில் நீ மோதுண்டதனால் மனைவியைத் தவறவிட்டாயா? மனைவியை அலை அள்ளிச் சென்றபோது, அவள் அழைத்தகாட்சி உன்னை வதைக்கிறதா? விரைந்துசென்று அவளைக் காப்பாற்ற முடியாத நிலையை எண்ணி உன் இதயம் வெடிக்கிறதா?

மனமே! உன்னைப் பேரலை உருட்டி அடித்த வேளை – உன்னையும் அலை கொண்டுபோயிருப்பின், கவலையே இல்லை என்று நினைக்கிறாய். இனி நீ வாழ்வதில் பயன் ஏதுமில்லை என்றும் நினைக்கிறாய். சாவதா? வாழ்வதா? என்ற நிலையில் மரத்துப்போய் நிற்கிறாய்? பேசவும் முடியாமல், உண்ணவும், உறங்கவும் முடியாமல் நடைப்பிணமாய் இருக்கிறாய். நீ உணர்ந்தும், உணராமலும் இருக்கிறாய்.

மனமே! உன் மனைவியை நீ இழந்த சம்பவ நிகழ்வும், அவளின் பிரிவும், அதன் துயர நினைவலைகளும் உன் பூப்போன்ற மென்மையான அடிமனதில் பதிந்திருப்பதை நீ அறியமாட்டாய். அந்தப் பதிவின் செயற்பாடோ நீ மரத்துப்போய் நடைப்பிணமாய் இருப்பதற்குக் காரணம் என்தையும் நீ அறிந்திருக்கமாட்டாய்.

மனமே! நீ இந்த நிலையிலிருந்து நீ மீளவேண்டும். மீண்டே ஆகவேண்டும். உன்னை, உன் முகத்தை ஒருதரம் கண்ணாடிக்குமுன் நிறுத்திப் பார். பலமுறைபார். உன் கண்ணை உற்றுப்பார். மேலும் பார். உன்னையறியாது உன் கண்கள் நீர் சொரியும். ஐயோ என்று அழத்தோன்றும். கொடூரமாகக் கண்ணாடியைக் குத்தவேண்டும்போல் தோன்றும். மனதை அடக்கிக்கொள். தோன்றிய ஆவேசத்தை அழுகைக்கு மாற்று. ஐயோ என்று அழு. உரத்துச் சத்தம்போட்டு அழு. வெட்கப்படாமல் அழு.

உன் மனைவி அலையில் போய்க்கொண்டிருந்த காட்சியை நினை. நினைத்து நினைத்து அழு. தேம்பித்தேம்பி அழு. முடியுமானவரை அழு. சொல்லிச் சொல்லி அழு. களைப்பு வரும்வரை அழுதுதீர்.

களைப்புடன் கண்களை மூடியவாறு படுத்துக் கொள். தூக்கம் வரும். நன்றாகத் தூங்கு. வேண்டியவரை தூங்கு. தூக்கம் தெளிந்ததும், கண்களை விழித்துக்கொள். உன் பாரங்கள் குறைந்திருக்கும். கண்கள் தெளிவுறும். தண்ணீரை நன்றாகக் குடி – புத்துணர்ச்சி ஏற்படும்.

மனமே! இந்த நிலைக்குப்பின் உன் மனதை உருக்கிய காட்சிகளை நினைக்காதே. மீண்டும் மீண்டும் பயங்கரமான வேலைக்கிடமானவற்றை உன் அடி மனத்துக்குள் அனுப்பக்கூடாது என்பதற்காகவே கூறுகிறேன்.

நீ வாழவேண்டியவன். மனைவியுடன் மாய்ந்து விட்டால், நீ மனைவியுடன்தான் செல்வாய் என்பது உனக்குத் தெரியுமா? நீ மரணித்துச் செல்லும் இடம் எது என்று உனக்குத் தெரியுமா? அந்த இடத்தில் அமைதி உனக்குக் கிடைக்குமா? செல்லுமிடம் நரகமா? சொர்க்கமா? தெரியுமா? உன் கவலைகளுக்கு அங்கு மீட்சி கிடைக்குமா?

கண்ணை மூடியபடியே சிந்தித்துப்பார் மீண்டும் மீண்டும் சிந்தித்துப்பார். மனமே! உன் உயிர் இருக்கும்வரை உன் உடல் உன்னோடுதான் இருக்கும். உன் உடலையும், உயிரையும் காக்கவேண்டியது உன் கடமை. உனக்கு நீதான் பதில் சொல்ல வேண்டும். உன்னை நீதான் காக்கவேண்டும்.

இவற்றையெல்லாம் சிந்தித்து அறியும் ஆற்றல் கொண்ட மனமே உன்னை நீ மீட்டுக்கொள்ள மனமே மீண்டெழுவாய்.

மலர் சின்னையா

# குழந்தைப் பேற்றைப் பின் தள்ளிப்போடுவது ஆபத்தானது

இன்றைய இளைய தலைமுறையினர் வசதிகளைத் துரத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் வாழ்க்கையை அவர்கள் துறந்துவிட்டு நிற்கிறார்கள் என்பது தான் உண்மை.

இன்பம் பொங்கும் இளமையில் திரு



மணமும் தித்திக்கும். இளம் வயதில் குழந்தைப்பேறும் இருந்த நம் நாட்டில், இப்போது திருமணத்தையும், குழந்தையையும் தள்ளிப்போடும் புதிய பழக்கம் இளம் வயதினரைத் தொற்றியுள்ளது.

நிறையப் படிக்கவேண்டும், பெரிய பதவிக்குப் போகவேண்டும், கைநிறையச் சம்பாதிக்கவேண்டும்... அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேறமுடியும் என்று நினைக்கிறார்கள். ஆண்களைப்போல, பெண்களும் இப்போது அனைத்துத் துறைகளிலும் முன்னேறுகின்றனர். இதெல்லாம் முடிந்த பிறகுதான் திருமணம், கணவன், குழந்தை, குடும்பம் என்று கனவுக் கோட்டைகட்டி வருகிறார்கள்.

இந்தக் கோட்டையைத் தகர்க்கும் வகையில், சில திடுக்கிடும் தகவல்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன.

ஆம், உலகம் முழுக்க எடுக்கப்பட்ட மருத்துவ முடிவுகள் நம்மைத் திடுக்கிட வைக்கத் தான் செய்கின்றன.

30 வயதுக்கு மேல் திருமணம் செய்யும் பெண்களில் மூன்றில் ஒருவர் குழந்தைப் பேறு இல்லாதவராக இருக்கிறார்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அப்படியே பிறந்தாலும், உடல் ஊன, மன ஊனக்குறைபாடு உள்ளவையாக இருக்கின்றன என்பது ஆராய்ச்சி முடிவு.

அதிர்ச்சி அலைகளை உருவாக்கிய இந்தப் புள்ளிவிபரங்கள் தொடர்பாகப் பார்த்தால் –

"ஒரு பெண் பூப்பெய்திய பிறகு 13 வயது முதல் 45 வயதுவரை கருத்தரிக்கலாம். 30 வயதை நடுத்தர வயதாகவே பெண்கள் கருதுகின்றனர். அது தவறு. கருத்தரிக்கச் சரியான வயது எதுவென்றால் அது 20 வயதுமுதல் 25 வயதுவரைதான். அதிகபட்சமாக 30 வயதுவரையும் கருத்தரிக்கலாம். 30 வயதைக் கடந்தபிறகு பெண்கள் கருத்தரித்தால், அவர்களுடைய கருவுறுப்புகளின் திறன் குறையும். இதனால் பிறக்கின்ற குழந்தைகளுக்குப் பாதிப்பு வரும்" என்று அந்தப் புள்ளிவிபரத்திலிருந்து தெரிய வருகிறது.

முப்பது வயதுக்குமேல் ஒரு பெண் கருத்தரித்தால், அந்தப் பெண்ணின் கரு முட்டையின் தரம் குறைந்துவிடும் என்று, மருத்துவ ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

20 வயது இளம் பெண்ணுக்கு இருக்கின்ற கருத்தரிக்கும் தன்மை, 30 வயதுக்குரிய பெண்ணுக்கு இருக்காது. 20 வயதுமுதல் 25 வயதுவரை பெண்களின் கருமுட்டை ஆரோக்கியமானதாக இருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் பெண் கருவுற்றால், அந்தக் குழந்தை ஆரோக்கியமாகவும், நோய் எதிர்ப்புசக்தி கொண்டதாகவும் இருக்கும். 30 வயதைத் தாண்டிய பெண் கருவுறும்போது – உடல் ரீதியாகப் பல்வேறுவகையான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

வயது போகப்போக பெண்ணின் உடலிலுள்ள ஆற்றல், கருவுறுப்புகளின் சக்தி ஆகியவை படிப்படியாகக் குறையும். இதனால் கருத்தரிக்கும் வாய்ப்பு கனவாகவே மாறிவிடும். 30 வயதைக் கடந்த பெண்கள் உடலில் ஓமோன் மாற்றங்கள், உயர் இரத்த அழுத்தம், கருப்பையில் கழலைகள், சினைப்பையின் செயற்திறன் குறைதல், நோய் எதிர்ப்புச் சத்துக்குறைவு, உடல் பருமன், நீரிழிவு, இரத்தச்சோகை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டியிருக்கிறது.

(தொடரும்...)

# பிஞ்சு முகத்தின் தேடல்

நான் மண்ணைக் கிளறிக் கொண்டிருந்தேன். நேற்று மாலை தொடக்கம் என்னுடைய மனத்தில் ஒரு கற்பனை ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள முற்றத்தில் றோசாத் தோட்டம் போடவேண்டும். அதற்கான முன்னோடி முயற்சியாக இன்று காலையில் எழுந்த உடனேயே தோட்ட வேலையைத் தொடங்கிவிட்டேன். வீட்டில் மண்வெட்டி கிடையாது. ஆனால் அம்மா விறகு வெட்டும் கத்தி இருந்தது. அதை எடுத்து மண்ணைக் கொத்தினேன். நிலம் இறுகிக்கிடந்தது. கிணற்றடிக்குப் போய் கொஞ்சம் தண்ணீர் அள்ளி வந்து ஊற்றினேன். நீரை, நிலம் உறிஞ்சி விட்டது. மண் இளகிவிட்டது. கத்தியால் கொத்தி அதைக் கிளறினேன். நல்ல வாசனை ஒன்று கிளம்பியது. அந்த வாசனை என் எண்ணத்தைக் கிளறியது.

எங்கள் குடும்பம் கொஞ்சம் பெரியது. அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி என்று எல்லாமாக எட்டுப்பேர். ஆனால் வீடுமட்டும் சின்னதாக இருந்தது. அதிலும் ஒரு அறைதான். அதற்குள் யாரும்போக முடியாது. அம்மா அந்த அறையை எப்பவும் பூட்டியே வைத்திருந்தாள். வீட்டிற்கு முன்னும்பின்னும் விறாந்தை நாங்கள் படிப்பது, படுப்பது, உண்பது எல்லாம் இந்த விறாந்தையில் தான். வெயில் காலத்தில் வேப்பமரக் காற்று வீச நல்ல தூக்கம் வரும். மழை காலத்தில் சாக்கினால் கட்டியதட்டி மறைப்பால் குளிர்தெரியாது. முன் விறாந்தையில் ஒரு சாய்மனைக் கதிரை அதைத் தவிர வேறு தளபாடம் எங்கள் வீட்டில் இல்லை. அந்தக் கதிரையில் ஒரு முறையில் படுக்க எனக்கு நல்ல விருப்பம். அப்பா மட்டும்தான் அதில் எந்த நேரமும் படுத்திருப்பார்.

அப்பா... அவருக்குச் சலரோகமாம். வலது கால் முழங்காலோடு வெட்டப்பட்டு விட்டது. ஆசுப்பத்திரியில் இருந்து வரும்போது, ஊன்று கோல்களோடு வந்தார். எனவே அவருக்கு மூண்டு கால் எண்டு நான் கணக்கு வைச்சிருக்கிறன். அம்மா தான் எங்கள் வீட்டில் முதலாளியும், தொழிலாளியும். காலையில் மூண்டு மணிக்கு எழும்பித் தோசை சுடுவாள். ஐந்து மணிக்கு அதைக் கடையில் கொண்டுபோய் பெரியண்ணா கொடுத்து விட்டு வருவான். அவன் வரும்போது, காசு கொண்டு வருவான். அதை அம்மா கணக்குப் பார்த்து சீலைத்தலைப்பில் முடிந்து கொள்வாள். எங்களுக்கு காலையில் ஆளுக்கு இரண்டு தோசை கிடைக்கும் சின்னத் தோசை!

வயிற்றுக்குக் காணாது. மீதிப் பசியை அடக்கத் தண்ணி நிறையக் குடிக்க வேணும். பள்ளிக்கூடத்தில் இரண்டாம் பாடம் முடிய, வயிறு கடிக்கும். மீண்டும் தண்ணியால் வயிற்றை நிரப்பிவிடுவதே வழக்கமாகிவிட்டது. எனக்குப் பாடத்தில் கவனம் செல்லாது. அடிக்கடி ரீச்சரிடம் குட்டு வாங்குவேன்.

மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து நேரே வீட்டிற்குப் போகும் வழக்கம் கிடையாது. இடையே புளியம்பழம், விளாங்காய், இலந்தைப்பழம், மாங்காய், கொய்யாக்காய் எண்டு காலத்துக்குக் காலம் காய்க்கும் மரங்களைப் பார்த்துப் பிடுங்கிச் சாப்பிடுவோம். என்னோடை இன்னும் 4 பேர் நல்ல கூட்டாளியள் இருக்கினம். அவை எல்லாரும் பொடியங்கள். நல்லா மரம் ஏறுவினம். அவையின் அப்பாமார் எல்லாரும் கூலிவேலைதான் செய்யிறவையள். எங்கட வீடுகளில மத்தியானச் சாப்பாடு கிடையாது. இரவு தான் சாப்பாடு. இடையில எங்கையாவது கோயிலிலை அன்னதானம் எண்டால் எல்லாரும் போவம்.

அண்டைக்கு ஒரு நாள்! நாங்கள் பள்ளிக் கூடத்துக்குப் போற வழியிலை ஒரு அம்மன் கோயில்!... அங்கை அன்னதானம் வழங்கப்படும் எண்டு எழுதிக் கிடந்தது. பள்ளிக் கூடத்திலை எனக்குப் படிப்பிலை மனமில்லை, ரீச்சர்சத்துணவு, நிறையுணவு எண்டு ஏதோ புலம்பிக்



மனோன்மணி சண்முகதாஸ்

கொண்டு இருந்தா. நானும், என்ரை கூட்டாளியளும் எப்ப கடைசி மணி அடிக்கும் எண்டு காத்திருந்தம் அப்பாடா!.. மணியடிச்சு !... எல்லாரும் வகுப்பை விட்டு வெளியேற எண்டு எழும்பி நிக்க... ரீச்சர் சொன்னா பாடம் முடியல்லை!.. ஒரு பத்து நிமிஷம் நிண்டு போகலாம்... ! ஐயோ!... இதென்ன சோதனை. இண்டைக்கு... அன்னதானத்துக்கு நேரம் போய்விடுமே? எனக்கு ஒரு யோசனை வந்தது.! ரீச்சர் தண்ணி குடிச்சுப் போட்டு வாறம்.! சரி கெதியாப் போட்டு வாங்கோ!... எண்டு ரீச்சர் சொன்னவுடனை எல்லாரும் ஈசல் போலப் பறந்து கிணற்றடிக்குப் போனோம். நானும் என்ரை கூட்டாளியளும் கண்ணாலை பேசி ஒரு முடிவுக்கு வந்தம். திரும்பி வகுப்புக்குப் போகாமல் ஓட்டமாக அம்மன் கோயிலுக்குவந்தம். நல்ல வேளை! .. அங்கை அன்னதானம் இன்னும் தொடங்கஇல்லை.


நிரையாக வாழையிலை போட்டு எல்லோரும் கோவில் முன் மண்டபத்திலை இருக்கினம். எல்லாரும் பெரிய ஆக்கள்! சோறு, கறி எல்லாம் பரிமாறப்பட்டு இருந்தது. முழு அப்பளம்!... வடகப் பொரியல் எனக்கு வாயூறியது.

தேவாரம் சொல்லப்பட்டது. நாங்களும் சொன்னம். சரி எல்லாரும் சாப்பிடுங்கோ! எண்டு ஒருதர் சொல்ல எல்லாரும் சாப்பிடத் தொடங்கிச் சினம். நாங்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டு நிண்டம்!... எங்களை அதிலை நிற்கவேண்டாம் வெளி வீதியிலை போய் இருங்கோ! எண்டு ஒருத்தர் சொன்னார். நாங்கள் வெளி வீதிக்கு ஓடினம்.!

அங்கை சனம் ஏற்கனவே வரிசையிலை இருந்திட்டுது. எனக்கு அழுகை வந்தது! கஷ்ரப்பட்டு அழுகையை அடக்கினன். என்ரை கூட்டாளியள்.. அவங்களும் என்னைப் போலத் தான்!.. அரைமணி நேரம் கழிய பந்தியிலை இருந்தவை சாப்பிட்டு முடிய, அவை சாப்பிட்டஇடம் எல்லாம் கூட்டப்பட்டது. தண்ணீர் தெளிக்கப் பட்டது. ஐயோ! அன்னதானம் முடிஞ்சு போச்சோ! என்ரை மனம் பதறியது. அந்த நேரம் ஒரு கடகம் நிறையச் சோறு கொண்டு ஒருவர் வந்தார். அவருக்குப் பின்னால் ஒரு அம்மா கறித்தூக்கோடுவந்தா எனக்கு ஒரு நப்பாசை ! எங்களுக்குத் தனிப் பந்தி வைக்கப் போகினம் போலை! அவை இரண்டு பேரும் எங்களைத் தாண்டிப் போய் ஒரு காரிலை ஏறிச்சினம்... நாங்கள் வயிற்றைத் தடவியபடி தலையைக் குனிந்துகொண்டு நடக்கத் தொடங்க. ரீச்சரிண்ரை சைக்கிள் பக்கத்திலை வந்து நின்றது. நாங்கள் திடுக்கிட்டுப் போனம்! அவவின்னை சைக்கிள் கூடைக்கை எங்கடை புத்தகங்கள் கிடந்தன.

ரீச்சர் சைக்கிளை நிப்பாட்டிப் போட்டு எங்களை வரச் சொன்னா!... நாங்கள் பயந்து கொண்டு பின்னாலை போனம். அவ கோயிலுக்கை போய் ஐயரோட ஏதோ கதைச்சா. கொஞ்ச நேரத்தில ஐயர் ஒரு பெரிய பாத்திரத்திலை அன்னதானச் சோறும், வாழையிலையும் கொண்டு வந்து ரீச்சரிட்டைக் குடுத்தார். ரீச்சர் எங்களை மண்டபத்திலை இருத்தினா வாழையிலையைப் போட்டா. சோற்றை வாழையிலை தன்ரை கையாலை, சோற்றை அள்ளி வாழையிலையை நிறைச்சு வைச்சா! எல்லோரும் சாப்பிடுங்கோ! எண்டு சொன்னா! நாங்கள் அஞ்சுபேரும் அள்ளிச்சாப்பிட்ட போது! நல்ல ருசியாக இருந்தது. என் கண்ணில் நீர் வடிஞ்சுது. ரீச்சர் கேட்டா என்ன நல்லா உறைக்குதே! நான் இல்லை என்று தலையாட்டினேன். அவவின் கண்ணீரும் என்னை வெட்கப்பட்ட வைத்தது. ரீச்சர்! மன்னிச்சுக்கொள்ளுங்கோ எல்லோரும் ஒரு குரலில் சொன்னோம். ரீச்சர் சிரிச்சா பசி தான் பொல்லாதது அது தான் எல்லாத்துக்கும் காரணம்! ரீச்சர் சொன்னா நாங்கள் எல்லோரும் தலையை ஆட்டினோம். ரீச்சர் எழும்பி நடக்க அவவின்ரை தலையிலை இருந்த சிவப்பு றோசாப் பூ என்னைப் பார்த்துச் சிரித்தது.

# தூக்கத்தில் அழும் குழந்தை



சில குழந்தைகள் - தூக்கத்தில் இருந்து அழுதுகொண்டு இருக்கும். கேட்டால் எதையோ கண்டு பயந்ததாகச் சொல்லும். ஆறுதல் படுத்தி தூங்க வைத்தால், தூங்கிவிடும் இன்னும் சில குழந்தைகள் தூக்கத்தில் அழும். முகமெல்லாம் வியர்ந்து வடியும். கண் திறந்திருக்கும். ஆனால் தூக்கம் கலைந்திருக்காது தட்டி எழுப்பித் தூங்க வைத்தால், தூங்கிவிடும் இதெல்லாம் நாளடைவில் சரி செய்யக்கூடியதே.

இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்தால் குழந்தை எழுவதும், அழுவதும் எந்த நேரத்தில் நேர்கிறது என்பதைக் கவனித்து அதற்கு பத்துப் பதினைந்து நிமிடம் முன்பாக எழுப்பி விட்டு, திரும்பத் தூங்கச்செய்யுங்கள். இப்படி ஓரிரு நாள் செய்தாலே பிரச்சினை தீர்ந்துடும்.

குழந்தைகளுக்கு தூக்கத்தில் ஏற்படும் குறைபாடுகளை நீக்க, சில யோசனைகளை செய்துபாருங்கள்.

☆ குழந்தையை வேறு எந்த விடயத்தையும் நினைக்காமல், தூக்கம் வரக்கூடிய சுவையான கதைகளைச் சொல்லுங்கள்.

☆ இரவு ஒன்பது மணிக்கு முன்பாக படுக்கப் பழக்குங்கள். பரபரப்பு, பரவசம், அதிர்ச்சி, பயம், துக்கம் போன்ற உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்படுவற்றை படுக்கைக்கு போகும்முன் தவிர்க்கவும். விருந்து போன்றவற்றுக்குக் குழந்தையை அழைத்துச் சென்று இரவு தாமதமாகத் திரும்புவதைத் தவிர்க்கவும்.

☆ குழந்தையை வீட்டில் தனியே விட்டு விட்டு, அடுத்த வீட்டில்போய் பேசுவதையோ. கொண்டாட்டங்களுக்குச் செல்வதையோ தவிர்த்து விடுங்கள். படுக்கைக்குப் போகும் முன் தொலைக்காட்சியில் வன்முறைக் காட்சிகள். திகில் காட்சிகளை குழந்தைகள் பார்க்க வாய்ப்பளிக்க வேண்டாம்.

☆ தூங்கப் போகும் முன் புல்லாங்குழல், வயலின் போன்ற இதமான இசையைக் கேட்கப் பழக்குங்கள். மிக முக்கியமானது - குழந்தையோடு தாயோ, தந்தையோ பாடசாலை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்னும் வகுப்பில் என்ன நடந்தது? விளையாடினீர்களா? என வினவவேண்டும்.

☆ குழந்தைக்கு முன்பாக பெற்றோர் சண்டையிடவோ, சத்தம் போட்டு விவாதிப்பதோ கூடாது. அது குழந்தைக்கு தூக்கத்தில் பயத்தை, அழுகையை ஏற்படுத்தும். குழந்தைக்குப் பயம் வரக்கூடிய படங்களைப் படுக்கையறையில் ஒட்ட வேண்டாம்.

☆ குழந்தை தூக்கத்தில் நடக்கும் பழக்கமாயிருந்தால், அந்த அறையின் கதவைப் பூட்டி திறப்பை கைக்கு எட்டாதபடி உயரமாக வைக்கவும். இவ்வாறு நடக்கும் பழக்கமிருக்கும் குழந்தை மோதிக் கொள்ளாதபடி அந்த அறையில் கூர்மையான பொருட்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும்.

குடும்பத்தில் முன்னோர் யாவருக்கும் இருந்ததா? இது போன்ற விடயங்களுக்கு வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெறலாம்.

ஆனால் இது நோயல்ல, நாமே தீர்வு காணக்கூடிய குறைபாடுதான்.

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 112 தற்காலிக வீடுகள் கையளிப்பு



வடமராட்சி கிழக்கில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இரு இடங்களில் 112 தற்காலிக வீடுகளைக் கொண்ட இரு குடியிருப்புகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்து வைக்கப்பட்டன.

இந்தக் கையளிப்பு நிகழ்வு– நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு வெற்றிலைக்கேணி மக்கள் வீடமைப்புத் தலைவர் யோகன் தலைமையில் இடம் பெற்றது.

வெற்றிலைக்கேணி, இடைக்காடு ஆகிய இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 37 தற்காலிக வீடுகளும், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 20 தற்காலிக வீடுகளுமாக 57 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை பங்குத்தந்தை நேசன் அடிகளார், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவன முகாமையாளர் ஹரோல்ட் , வெற்றிலைக்கேணி கிராம சேவையாளர் சிவலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி சலீம், வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா பாடசாலை அதிபர் இந்திரலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து வீடுகள் கையளிக்குத் நிகழ்வு இடம் பெற்று, வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சிவஞானம், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவன திட்ட இணைப்பாளர் அருளானந்தம் ஆகியோர் – வீடுகளுக்கான திறப்புகளை மக்களிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை கட்டமைப்புச் செயலாளர் யூதா நிகழ்த்தினார்.

இதேவேளை, விநாயகபுரம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு யோகன் தலைமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 25 தற்காலிக வீடுகளும், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 30 தற்காலிக வீடுகளுமாக 55 வீடுகளைக் கொண்ட குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான செஞ்சேரன், மக்கள் பிரதிநிதிகள் சார்பாக தில்லையம் பலம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை பங்குத்தந்தை நேசன் அடிகளார் நிகழ்த்தினார்.

தொடர்ந்து வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் – வீடுகளுக்கான திறப்புகளை சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனப் பிரதிநிதி நடா, கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாகச் செயலாளர் சுப்பிரமணியம் ஆகியோர் கையளித்தனர்.

நன்றியுரையைத் தொடர்ந்து சுனாமி கடல் அனர்த்த செயலணிக்குழுச் செயலகத்தின் இணைப்பாளர் சுடர்மணி மிகுதன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள், பொது மக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் - 18

1843 - ஒளிப்பட உருப்பெருக்கி (போட்டோ என்லார்ஜர்) இயந்திரத்துக்கான காப்புரிமையை அமெரிக்காவைச் சேர்ந்த ஏ.வோல்க்காட் என்பவரும், ஜே.ஜான்சன் என்பவரும் பெற்றுக் கொண்டனர்.

1895- பெற்றோலிய எரிபொருளில் ஓடும் முதல் பஸ்வண்டியின் வெள்ளோட்டம்.

1903 - கத்தோலிக்க மத அமைப்புக்களை பிரெஞ் அரசு ச[illegible] விரோதமானது என அறிவித்து கலைத்து விட்டது.

1921 - நிகா என்றழைக்கப்பட்ட உடன்படிக்கை போலந்துக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, போலந்து - உன்ரைன் மீதுள்ள உரிமையை விட்டுக் கொடுத்தது.

1930 - அமெரிக்க விஞ்ஞானி கிடைட்டோபாக் என்பவரால் புளூட்டோ கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது.

1931 - மின்சாரத்தால் இயங்கும் முகச் சவரக்கத்தியை அமெரிக்காவைச் சேர்ந்த கேணல் ஜாக்கப் என்பவர் கண்டு பிடித்தார்.

1944- ஒரு நகரையே புதைத்த விசூவியஸ் எரிமலை மீண்டும் வெடித்து எரிமலைக் குழம்பைக் கக்க ஆரம்பித்தது. இரு கிராமங்கள் எரிமலை சாம்பலினால் மூடப்பட்டன.

1945- கமிகாசி என அழைக்கப்பட்ட விமானத் தற்கொலைப்படைத் தாக்குதல்களை ஜப்பான் ஆரம்பித்தது.

1965 - வோஸ்கார்ட் - 11 என்ற விண்கலம் சென்ற அலெளக்ஸி லினோங் 4.5 மீற்றர் நீளமுள்ள நைலோன் கயிற்றினால் தன்னை விண்கலத்துடன் இணைத்துக் கொண்டு, விண்வெளியில் 10 நிமிடங்கள் வரை நடந்து முதன் முதலாக விண்வெளியில் நடந்த வீரர் என்ற சாதனையைப் புரிந்தார்.

1967- அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான எண்ணைக் கசிவு ஏற்பட்ட நாள்.

1992- தென்னாபிரிக்காவில் நிற வெறிக்கு எதிராகவும், கறுப்பு இனத்தவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள ஆதரவாகவும் வெள்ளை இனத்தவர் வாக்களித்த நாள்.

தொகுப்பு - சந்துரு

## புதிய வைத்திய அதிகாரி நியமனம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு பிராந்திய தொற்று நோய்க்கு புதிய வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலைக்குப் புதிய வைத்திய அதிகாரியாக வைத்தியர் நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

(க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு லண்டன் சாயி நிறுவனத்தால் கண் சிக்ச்சை

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு லண்டன் சாயி நிறுவனத்தால் கண் சிகிச்சை நடைபெற்று வருகிறது.

இந்தக் கண்சிகிச்சை முகாம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையிலும், புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையிலும் நடைபெற்று வருகிறது.

இதுவரையில் முல்லைத்தீவு மருத்துவமனையில் 300 இற்கும் மேற்பட்டவர்களுக்கும் விட 23 பாடசாலைகளிலும் கண்பரிசோதனை நடத்தியதாகவும் –

இவர்களில் ஒரு தொகுதியினருக்கு கண்ணாடி வழங்கப்பட்டதுடன், ஏனையோருக்கு கண்ணாடி வழங்க ஏற்பாடு நடைபெற்று வருவதாகவும் வைத்திய குழுவுக்கு தலைமை வகிக்கும் சீ.சிவானந்தன் தெரிவித்தார்.

இந்த மருத்துவக் குழுவில் – 40 மருத்துவர்களும், 20 தாதியரும் மொத்தமாக 150 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதுவரையில் 30 நோயாளருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

## துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பு 10 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

வடமராட்சி வெற்றிலைக்கேணி, ஆழியவளைப் பாடசாலை மாணவருக்கு இந்த துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இதனை வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஆ.மூவேந்தன் வழங்கி வைத்தார். இது வரையில் இந்த பிரதேசத்துக்கு 37 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கரும்பலகைகள் வழங்கல்

பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த 24 பாடசாலைகளுக்கு ஜப்பானிய தேசியக்கூட்டு நிறுவனத்தால் தலா 5 கரும்பலகைகள் வீதம் வழங்கப்பட்டன

இந்த நிகழ்வு – கடந்த சனிக்கிழமை பூநகரி மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய வதிவிடப் பிரதிநிதி சகாக்கா, வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாகப் பிரதிநிதி ஒ.சுமி மிசுமாரி, வடக்கு – கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம், தேசிய கல்வி நிறுவன செயற்திட்ட அதிகாரி தே.முகுந்தன், வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு, கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பஸ்நிலைய சூட்டுச் சம்பவ வழக்கு

## பொலிஸார் அலட்சியமாக நடப்பதாக வவுனியா மாவட்ட நீதிவான் விசனம்

ஈழநாதம் பத்திரிகை விற்பனை செய்த இளைஞர் மீதான படையினரின் கொலை முயற்சி வழக்கில் யாழ்.பொலிஸார் உதாசீனமாக நடந்துகொள்வதாக, வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக அதிகாரம் பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்கத் தவறியமை காரணமாக, நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி நடவடிக்கை எடுக்க நேரிடுமெனவும், நீதிபதி, யாழ் – பொலிஸ் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்தார்.

ஈழநாதம் பத்திரிகையை யாழ். நகரப் பகுதியில் விற்பனை செய்த செல்வராசா விஜயகுமார் என்ற இளைஞன் மீது கடந்த டிசம்பர் 9 ஆம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, படுகாயமடையச் செய்ததற்காக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கெதிராக கொலை முயற்சி குற்றம் சுமத்தி, யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், இந்த வழக்கை வடக்கு – கிழக்குக்கு வெளியே உள்ள நீதிமன்றில் விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரி, சந்தேக நபர்கள் மனுத்தாக்கல் செய்ததையடுத்து, இந்த வழக்கை வவுனியா மாவட்ட நீதிமன்றில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், வவுனியா மாவட்ட நீதிபதிக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் வவுனியா நீதிமன்றில் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரே நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

எனினும், பொலிஸ் அதிகாரி ஒருவரை அனுப்புமாறு உத்தரவிட்டு, இந்த வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

இவ்வாறு ஒத்திவைத்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே ஆஜராகியிருந்த யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கொன்ஸ்டபிள் ஒருவர், பல்வேறு கடமைகள் காரணமாக உரிய பொலிஸ் அதிகாரி, நீதிமன்றத்துக்கு சமூகமளிக்க முடியவில்லையெனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, நீதிமன்றின் உத்தரவு யாழ்.பொலிஸாரால் உதாசீனம் செய்யப்படுவதாக தெரிவித்த நீதிபதி – எதிர்வரும் 20ஆம் திகதி அதிகாரம் வாய்ந்த பொலிஸ் அதிகாரியொருவரை அனுப்பிவைக்குமாறு மீண்டும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் முக்கியமான இரண்டு சாட்சிகளும், சந்தேக நபரான இராணுவச் சிப்பாயும் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர் என சந்தேகிக்கப்படும் இராணுவச் சிப்பாயை சாட்சிகள் அடையாளம் காட்டினர்.

## அயடீன் கலக்காத உப்பு பாவனைக்குத் தடை

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள கடைகளில் அயடீன் கலக்கப்படாத சிபார்சு செய்யப்படாத கறியுப்பை விற்பனை செய்யப்பட்டமை தமிழீழ சுகாதாரசேவையினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது கண்டு பிடிக்கப்பட்டது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கை யின்போதே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

கண்டுபிடிக்கப்பட்ட உப்பு விற்பனைக்குத் தடைசெய்யப்பட்ட துடன் அயடீன் கலந்த உப்பையே விற்பனை செய்யவேண்டும் எனவும் பணிக்கப்பட்டது. இது குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் அயடீன் கலந்த சிபார்சு செய்யப்பட்ட உப்பையே உணவுப் பாவனைக்குப் பயன்படுத்துமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதி உரையின் உள்நோக்கம் என்ன?

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகள் மற்றும் பாதிப்புகள் தொடர்பான புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கவும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படும் வகையில் பொதுக்கட்டமைப் பொன்றினை உருவாக்குவது தொடர்பான நோர்வேயின் உத்தேச வரைபினை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ள சூழலில் அரச தரப்பினரின் பதிலுக்காக காத்திருக்கும் நிலையில் - ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ள செய்தியானது பலரையும் திகைப்புக்கும் குழப்பத்திற்குமுள்ளாக்கியுள்ளது.

வெளிநாடுகளிடமிருந்து ஆழிப்பேரலை அனர்த்த நிதிக்காக இதுவரையில் ஐந்து சதம் கூடக் கிடைக்கவில்லை என அவர் தங்காலையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் வைத்து பகிரங்கமாகத் தெரிவித்துள்ளமையானது, ராஜதந்திரவட்டாரங்களில் சர்ச்சையை உண்டு பண்ணியுள்ளதுடன், ஏற்கனவே உதவியளித்த நாடுகள் கடும் அதிருப்திக்கும் உள்ளாகியுள்ளன.

இதுநாள்வரைக்கும் ஜப்பான் மட்டும் சுமார் 810 கோடி ரூபாய்களை சுனாமி நிவாரண நிதிக்கென வழங்கியுள்ளதாகக் கூறும் அந்நாட்டின் தூதரக வட்டாரம் - ஜனாதிபதியின் இந்தக் கூற்றால் கடும் விசனமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை, இதே நிவாரணப்பணிக்கென உலக வங்கியானது சுமார் 15 கோடி அமெரிக்க டொலர்களை - அதாவது இலங்கைப் பணத்தில் 1500 கோடி ரூபாய்களை வழங்க உறுதியளித்துள்ளதுடன், ஏற்கனவே 150 கோடி ரூபாய்களை திறைசேரிக்கு நேரடியாக வழங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

இந்தப் பணமெல்லாம் ஜனாதிபதி கூறும் ஐந்து சதத்திற்குள் அடங்கவில்லையா? அல்லது இந்த தொகைப் பணத்தை வேறு ஏதாவது கணக்கில் சேர்த்துக் கொண்டாரா?

ஜனாதிபதியே இதை விளக்கவேண்டியவராவார்.

இது ஒரு புறமிருக்க, சென்றவாரம் நாடாளுமன்ற உயர் குழுமுன் உரையாற்றிய திறைசேரிச் செயலர் சுனாமி அனர்த்த நிவாரண நிதியாக இதுவரை ஏழாயிரம் கோடிரூபாய்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்ததாக எதிர்கட்சிப் பிரமுகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதை வைத்துப் பார்க்கும் போது, அனர்த்த நிவாரண நிதிகளைக் கையாள்வதில் அரசுக்குள் பெருந்தில்லுமுல்லு நடக்கிறதோ என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும்.

சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்த உடனேயே சாவதேச சமூகத்தினர் தாமாகவே முன்வந்து இலங்கைக்கு பல்வேறு வகையிலும் உதவிகளைச் செய்வதென்பது வெளிப்படையான விடயமேயாகும்.

இந்த உதவிகள் பணமாகவும், பொருட்களாகவும் வந்து குவிந்ததையும், இன்னமும் வந்துகுவிந்து கொண்டிருப்பதையும் அன்றாடம் ஊடகங்கள் தெரிவித்த வண்ணமேயுள்ளன.

இந்த நிதியையும், பொருட்களையும் அரசாங்கம் நீதியாகவும், நியாயமாகவும் நிவாரணப்பணிகளில் பங்கீடு செய்யவில்லை. பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்றும், தவறான வழிகளில் சுனாமி நிதி கையாளப்படுவதாகவும் பலதரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள சூழலில், ஜனாதிபதியின் உரையானது எத்தகைய உள்நோக்கத்துடன் இந்தச் செய்தியை மக்களுக்கு கூறியுள்ளது என்பது பலரையும் குழம்பவைத்துள்ளது.

இதுவரை சுனாமி அனர்த்த நிதிக்கென ஐந்து சதம் கூட வெளிநாடுகளால் வழங்கப்படவில்லையென்றால், பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி அரசு என்னதான் செய்யப் போகிறதாம்?

வெறுங்கையால் முழம் போடமுடியாதல்லவா?

சரி, சர்வதேச சமூகம் வாக்குறுதி மட்டுமே அளித்தது. சொன்னபடி நிதியை இன்னும் வழங்கவில்லை என்றால் திறைசேரி செயலரும், மத்தியவங்கி ஆளுநரும் கூறுவது பொய்யா?

பொதுக் கட்டமைப்பை உருவாக்கினால் தான் நிதியை வழங்குவோம் என வெளிநாடுகள் நிபந்தனை எதனையும் விதித்துள்ளனவா?

இதுவரை ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் வழங்கயுள்ளதாகக் கூறப்படும் நிதியை அவர்கள் வேறுதேவைகளுக்காகப் பயன்படுத்தச் சொன்னார்களா? அல்லது அரசு அதனை வேறுவகையில் பயன்படுத்திவிட்டதா? திறைசேரி வங்குறோத்து நிலையில் இருக்கும்போது ஆயுதப் படைகளுக்கான கொள்வனவுகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டிவரும் அரசின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது எத்தனையோ சந்தேக வினாக்கள் எழவே செய்கின்றன.

இந்தச் சந்தேகங்களுக்கெல்லாம் விளக்கமளிக்க வேண்டியவர் ஜனாதிபதி மட்டுமே. அவர் இதற்கான விளக்கத்தைத் தருவாரா?


அல்லது வழமைபோன்று ஜனாதிபதியின் பேச்சு திரித்துக கூறுப்பட்டுள்ளது. அவர் அவ்வாறு பேசவில்லை. ஊடகங்கள் செய்திகளை விஷமத்தனமாக வெளியிடுகின்றன என ஜனாதிபதி செயலகத்திலிருந்து மறுப்பறிக்கை வெளியிடப்பட்டு சமாளிக்கப்படுமா?

எதுவானாலும் சர்வதேச சமூகம் இலங்கையில் நடைபெறும் அனைத்தையும் ஆழ்ந்து அவதானிக்க வேண்டிய கட்டம் இதுவேயாகும்.

இல்லையேல் -

ஊரின் காதில் சுற்றப்படும் பூ உலகின் காதிலும் சுற்றப்படும் ஆபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# உனக்கும் பெப்பே, நோர்வேக்கும் பெப்பே உலக நாடுகளுக்கும் பெப்பேதானா?

இலங்கையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தும் சமாதான முயற்சிகள் நிறைவேறப்போவதில்லை. தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் போரினாலும் பின்னர், சுனாமிப் பேரழிவாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் புனர்வாழ்வும், அந்தப் பகுதிகளில் அழிந்து போனவைகளைப் புனரமைக்கவும் எந்த முயற்சிகளுமே நடைபெறப் போவதுமில்லை. "உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே" என்று நோர்வேக்கும் மற்றும் உலக நாடுகளுக்கும் கொழும்பு பெப்பே காட்டப்போகுது என்று சொன்ன படியே எதிரில் வந்தமர்ந்தார் பரமசிவம்.

சுனாமி வந்து போனபின் நீரும் மட்டக்களப்பு மழையில் தொலைந்து போய்விட்டீர் என்று நினைத்தேன். மீண்டும் வந்து நிற்கிறீரே என்றேன்.

நீர் தொலைந்தால் தானே நான் தொலைவதற்கு என்ற பரமசிவத்தை இடைமறித்து, உமது வீட்டுக்கதவை எத்தனை நாள்தட்டிப் பார்த்தேன். கதவையாரும் திறக்கவேமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறாங்க போல என்றேன்.

யார் கதவைத் தட்டினாலும் திறக்கக் கூடாதென்று நான் தான் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறேன். காலம் நன்றாகக் கெட்டுக் கிடக்கு. வில்லங்கத்தை விலைக்குத் தேட வேண்டுமா? என்றார் பரமசிவம்.

நீர் வெளியிலிருந்து போய்க் கதவைத் தட்டினாலும், திறக்காவிட்டால் உம்கதி என்ன என்றேன்.

நான்தனியான சிக்னல் வைத்திருக்கிறன். அது அவவுக்குத் தெரியும். என்றார் பரமசிவம் உமக்கும் சொல்லமாட்டேன் உமக்கும் சொல்லமாட்டேன் என்றார் தொடர்ந்து.

உம்முடைய மனுசி என்ன இளம் பெட்டை எண்ட நினைப்பில பூட்டி வைக்கிறீராக்கும் என்றேன்.

இப்ப கிழவிகளையே விடாமல் பலவந்தம் செய்கின்றார்கள். நீர் என்ன சொல்லுகிறீர். இது மட்டுமே கிட்டடியில் ஒரு கோவில் திருவிழா – கோவிலிருந்து ஒரு இருபது யார் தூரத்திலுள்ள வீட்டுக்கதவை இரண்டு பேர் போய்த் தட்டியிருக்கிறார்கள். அது யார் என்று கேட்டபடி வீட்டுக்காரி வந்து கதவைத்திறந்ததுதான் தாமதம் – ஒருவன் அவவின் கழுத்திலிருந்த தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான். பிறகென்ன போனது போனது தான் என்றார் பரமசிவம்.

இவங்களைத் தான் முந்தி எங்கடை ஆட்கள் தாலி அறுப்பான்கள் என்று சொல்லித் திட்டுகிறவையள் என்றேன்.

இவங்களைச் சொன்னார்களோ, வேற யாரையும் சொன்னார்களோ தெரியவில்லை. இப்பதாலியறுக்கிறவங்கள் ஆண்களின் கழுத்திலிருக்கிற சங்கிலிகளையும் அறுக்கிறான்கள் என்றாலும், எங்கடை ஆட்களுக்கு நேரகாலம் தெரியாமல் கழுத்து நிறைய நகைகளை அடுக்கித் திரியினம். போதாக்குறைக்கு குழந்தைகளுக்கும் நகைகளைப் போட்டு அலங்கரித்து ஆபத்தைத் தேடிக்கொடுக்கினம் என்றார் பரமசிவம்.

இதெல்லாம் அரசாங்கம் சொல்லுகின்ற விடுவிக்கப்பட்ட பகுதிகளில்தானே அதிகம் நடக்குது. காவல்துறை பாதுகாப்புப் படைகள் மூலைக்கு மூலை, சந்திக்குச் சந்தி என்று முகாம்கள் வைத்திருக்கினம். இந்தக் கொள்ளைகளையும், வல்லுறவுகளுக்கு வேலி பாய்கிறவர்களையும் தடுக்கவோ, கண்டுபிடிக்கவோ முடியாதோ? என்றேன்.

பெரும்பாலான சம்பவங்களில் வேலியே பயிரை மேயும் போது, இதையெல்லாம் எப்பிடித் தடுப்பது. ஆனால், சில விடய்ங்களில் மக்கள் விழித்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றார் பரமசிவம்.

அதுசரி வடக்கில் அரசபடைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவ விபத்துக்களும், வேலிபாய்ந்து வல்லுறவுக்கு முயற்சிக்கும் செயல்களும் குழப்பத்தை ஏற்படுத்தி அமைதியைக் குலைக்கிறது. கிழக்கில் பாதுகாப்புப் படைகள் அதிரடிப்படைகள், காவல்துறையினரின் முகாம்கள் சூழ உள்ள இடங்களில்தான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், ஆட்கடத்தல்கள் மட்டுமல்ல, வதந்திகளும் பெருமளவில் பரப்பப்பட்டு அமைதியைக் குலைக்கின்றன.

இதே சமயம் நாங்கள் போருக்குப் போகப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா சொல்லிவருகிறார். இந்த நிலையில் பாதுகாப்புப் படைகளை எதற்காக வடக்கு – கிழக்கில் வைத்திருக்கவேண்டும். இந்தப் பகுதிகளிலிருந்து பதுகாப்புப் படைகளை விலக்கிக் கொள்வதன்மூலம் அல்லது குறைத்துக் கொள்வதன் மூலம் வேண்டாத பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். அல்லது தடுத்து விடலாமே என்று நான் சொன்னேன்.

சந்திரிகா இதுபற்றிச் சிந்தித்தாலும், ஜே.வி.பியும், துறவிகளைக் கொண்ட ஹெல உறுமயக்களும், பேரினவாத ஊடகங்களும் சும்மா இருக்கப்போகின்றனவா? என்றார் பரமசிவம். படைகளை விலக்கிக் கொண்டால் பலருக்கு வேலையே இல்லாமல் போய்விடுமேயென்றார் தொடர்ந்து...

அதுசரி வரும்போது சமாதான முயற்சிகளும் சரி, சுனாமி நிவாரணத்துக்குப் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் யோசனையும் சரி ஒன்றுமே உருப்படப்போறதில்லை என்று ஏதோ சொன்னீரே என்னது என்றேன்.

சுனாமி நிவாரண வழங்கலுக்கு அரசு – புலிகள் பொதுக்கட்டமைப்புக்கு நோர்வே தெரிவித்த யோசனையை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அரசு இன்னமும் முடிவு சொல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது என்றாலும், அரசு இதை ஏற்றுக்கொண்ட மாதிரித்தான் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேசமயம். அரசு – புலிகள் பொதுக்கட்டமைப்பு அமைப்பதைவிட, சார்க் நாடுகளைக் கொண்ட ஒரு அமைப்பிடம் இதை ஒப்படைக்கலாம் என்று பிக்குகளின் ஹெல உறுமய புதிதாக ஒரு யோசனையைக் கிளப்பியிருக்கிறது.

முஸ்லிம்களைக் கலந்தாலோசிக்காமலும், முஸ்லிம் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளாமலும் அமைக்கப்படும் பொதுக்கட்டமைப்பினால் எந்தவித பயனும் ஏற்படாதென்பதும், இதற்குத் தாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கப்போவதில்லையென்றும் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய முன்னணி ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும் இடமளிக்கப்படவேண்டுமென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் லீக் தலைவர் ரவூப் ஹக்கீம் ஏற்கனவே குரல் கொடுத்திருந்தார். முஸ்லிம்களுக்கு இடமில்லாவிட்டால் அவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காதென்றும் சொல்லியிருந்தார். பொதுக்கட்டமைப்புக்கே ஜே.வி.பி, ஹெலஉறுமய, முஸ்லிம் லீக், தேசிய முன்னணி ஆகியவை எதிர்ப்புத் தெரிவிப்பதென்றால் அமைச்சரின் ஈ.பி.டி.பி, சங்கரியாரின் அணியென்று "சேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை" என்று சொல்வார்களே. இப்படிப்பட்டவர்களைக் கொண்ட கையாலாகாதவர்களும், எதிலேயும் நம்பிக்கை இல்லாத விரக்தியாளர்களும் பொதுக்கட்டமைப்பு என்னசெய்யப்போகுது என்று சலித்துக்கொண்டிருப்பார்கள். இவையெல்லாம் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளுக்கே வாய்ப்பாக இருக்கும் என்றார் பரமசிவம்.

இப்பொழுது மீண்டும் இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை பற்றியும், சமஷ்டி பற்றியும் அம்மையார் கருத்துக் கணிப்பு நடத்துவாராம். தமிழ் மக்கள் ஒத்துழைக்க வேண்டுமாம்.

அம்மையார் தாம் ஆட்சியில் அதிகாரத்துடன் இருப்பதற்குக் கருத்துக்கணிப்பு நிகழ்த்தி, சமஷ்டி என்ற வார்த்தையையும் சேர்த்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

கருத்துக்கணிப்பை ஏற்று சமஷ்டிக்கு வாக்களித்தாலும், எப்படியான சமஷ்டி என்பதிலேயே வாதப்பிரதிவாதம் நடத்தி, தெரிவுக்குழு வைத்துக் காலங்கடத்தி தமிழர் – நெற்றியில் பெரிய பட்டை நாமம் போட்டு விடுவார் என்றேன்.

அது உண்மைதான் என்ற பரமசிவம் மீண்டும் ஒரு போரைத் தொடங்குவதற்கு ஜே.வி.பி ஆர்வமாக இருக்கிறது போல் தெரிகிறது. இதன் பின்னணி என்ன என்பதுதான் விளங்கவில்லை என்று எழுந்தார் பரமசிவம்.

பகுதி - 64

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

அவரையும் தூக்கிக்கொண்டு போயித்து. பள்ளிவாசல்ல குடுத்திட்டு வந்த காலில காயம் எண்டு பள்ளிவாசல்ல ஒப்புக்காட்டித் தான் விட்டவுட்டுப் வோட்டு மறா போயித்து நானா மையத்த குளிப்பாட்டி குடுத்துப் போட்டு மாற இங்கே வந்த ஜனாசா கிடைச்ச எனக்கு மாற இரவு போகக்குள்ள ஏழரை மணி. நெருப்புக்குச்சி அடிச்சு அடிச்சு வழி பார்த்துத்தான் போன மாசத்து மூணு நாளைக்கு புறவுதான் இரட்டை மகனுடன் ஒருத்தண்ட ஜனாசா எடுத்தது. பிறகு ஆர் வந்து உங்களுக்கு உதவினது?

'பிறகு ஆர்வந்து கொண்டு போனாங்க பள்ளிக் கூடத்த? ஆர் சாப்பாடு போக்குவரத்த தந்தாங்க? மக்கள் போனதில ஆர் வந்தாங்க சாப்பாடு தந்து ஆதரிச்சாங்க எண்டு விளக்கிச் சொன்னதில்ல.

ஏளெட்டுநாள் சாப்பாடு தின்னேலாத நிலமே இருந்தது தான். கொண்டந்து கொண்டந்து சாப்பாட்டத் தந்தாங்க தான் சாப்பாடு திண்டுக் கேலாது தானே?

மக்கள்ட கவலையில நாங்களாக திரிஞ்சு திரிஞ்சு ஜனாசா எடுத்தது தான். இப்படி கவலையில சாப்பாடு என்ன? இவரும் உடம்பு நிறைய காயம்.

இன்னும் சுவையறிவு எண்டது மனசுக்கில்லாத நிலைப்பாடுதான் இருந்திட்டிருக்கு. எங்கட மக்களைத் தேடக்குள்ள 17 ஜனாசா தூக்கியிருக்கேன். நான் பொக்குள் இல்லாத புள்ள ஒண்ட நான் தான் தூக்கிக் குடுத்த புறந்த ரெண்டு மூண்டு நாள் புள்ளயாத்தான் இருக்கும்.

நம்மட மக்கள் இப்படி கொப்புக்க கிடந்தாங்க - இப்பிடிக் கிடந்தாங்க. எண்டக்க மனதில எந்த நேரமும் கவலயதான் இரிக்கி. நம்ம எடுக்காம இருந்திருந்தா மக்கவங்க எடுத்திருந்தா காட்டாது. நான் தேடி எடுத்தபடியா இப்படிக் காட்டுது.

இப்ப எனக்கு எதுவும் யாது இல்ல. நாளைக்கு உங்களைக் கண்டாலும் யாது இருக்காது.

எனக்கு நிறையக் காயம் உடம்பு நிறைய... எனக்கு இறைவன் தந்த சக்தி எண்டுதான் சொல்ல வேணும். மூணா நாளத்து மையத்த எடுத்து அடக்கினோன்ன எனக்கு யாது இல்லாமப் போயித்து. மையத்த எடுத்து அடக்கு மட்டும் எனக்கு உயார் போலத்தான் இரிந்திச்சி. இந்த இடையெல்லாம் மூணு நாளா புரட்டிப் புரட்டி மையத்த தேடினது



தான் - குழை கொப்பெல்லாம்.

அதுக்குப் புறவுதான் கத்தியிருக்கேன். கத்தி என்ன செய்ய? எல்லோரும் அந்த மாதிரி பறிகுடுத்திருக்கம், இப்ப எண்ட மவன் சாப்புடுறாரில்ல. ஒத்தோட ஞாபகம் பள்ளிக்கும் ஒண்ணாத்தான் போறவங்க. ஒண்ணாப்போய் ஒண்ணா வாறவங்க. படுக்கேக்கையும் ரெண்டுபே ரும் ஒரு சாறன எடுத்து போதட்டிட்டுப் படுப்பாங்க. அதால என்னத்துக்கு பள்ளிக்குப் போய் என்ன? எண்ட ஒத்தை இல்ல. என்ட தம்பி இல்ல. என்ட தங்கச்சி இல்ல. நானா இல்ல. நான் படிச்சு என்ன? எண்டைக்கு எண்டாலும் நான் மௌத்து தானே? எண்டு சொல்றார்.

(தொடரும்)

# இந்த வார பலன்

## 18-03-2005 - 24-03-2005

| சூ புத சுக் | ராகு | | சந் சனி |
|---|---|---|---|
| யுரே | 20 கா 7-01 கட.சந்<br>22 இ 7-11 சிங்.சந்<br>24 பி.இ. 5.29 கன்.சந்<br>24 பி.இ. மீன-ரா<br>24 பி.இ. கன்.கே | | |
| செவ். நெப். | | | |
| | | கேது | குரு |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் அந்நியோன்ய உறவு மிகும். இல்லற தருமம் சிறப்பாக நடக்கும். புத்திரர்களால் நற்பெயரும், கீர்த்தியும் ஏற்படும். வீட்டில் நற்கரும கொண்டாட்டங்கள் நிகழும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள், காதல் விவகாரங்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு நீண்டகால எதிர்பார்ப்புகள் நிறைவேறும். அரசாங்க உதவிகள் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். வங்கி உதவிகளும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்புச் சித்திகள் பெறுவர். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கிட்டும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்ப நிலை சுமாரா இருக்கும். திட்டமிட்ட கருமங்கள் நெருக்கடிகளைக் கொடுக்கும். பணச் செலவுகள் அதிகமாக இருக்கும். தேகாரோக்கியம் பற்றிக் கவனம் எடுத்தல் நன்று. கஷ்டங்கள் ஏற்பட்டாலும் தெய்வ வழிபாட்டால் சாந்தி கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்குக் கடின உழைப்பு செய்தாலும் நன்மை கிடையாது. அதிகாரிகள் கடமையில் குற்றம் காண்பர. வர்த்தகர்களுக்குப் பொருட்கள் கொள்வனவில் செலவு அதிகமாகும். குறிப்பிட்ட விலைக்கு பொருட்களை விற்கமுடியாது. எனவே லாபம் குறையும். தனித்தொழில் செய்வோருக்கும் போட்டிகள் அதிகரிக்கும். மாணவர்கள் விளையாட்டில் அதிக கவனம் எடுப்பதால் முன்னேற்றம் குறையும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன ராசிக்காரர்களுக்குக் குடும்பத்தில் நல்லுறவு பேணப்படும். பண வருவாய் சிறப்பாக அமையும். புத்திரர்களால் நன்மைகள் கிடைக்கும். இனபந்துக்களால் நன்மைகள் உண்டு. தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். தேகாரோக்கியம் நன்று. விவாகப் பேச்சுக்கள் நன்மையான பலன்களைத்தரும். உத்தியோகத்தர்கள் தமது விருப்பப்படி தொழிலைச் செய்து நற்பெயர் பெறுவர். பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகும். வங்கி உதவிகள் கிடைக்கும். வாடிக்கையாளர் கூடுவர். தனித்தொழில் செய்வோருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். உயர் கல்விபெற வாய்ப்புகள் உண்டு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் ஜனனமானவர்களுக்குக் குடும்பத்தில் மனநிம்மதி குறையும். இடையிடையே சச்சரவுகளும் ஏற்படும். பிரயாணங்களின் போது அலைச்சல் கூடுதலாக இருக்கும். பணவருவாய் மத்திமமாகவே இருக்கும். தேகாரோக்கியம் இடையிடையே சிறிது பாதிக்கப்படும். திருமணப்பேச்சுக்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகம். சகாக்களிடையே மனக்குழப்பம் தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் முன்னேற்றம் குன்றும். பழைய கடன்களை மீளப் பெறுவது கடினம். தனித்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வருவாய் போதாமல் அவதிப்படுவர். மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் குறைவாகவே இருக்கும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியினருக்கு இல்லறம் நல்லறமாக அமையும். புத்திரர்களால் நன்மை ஏற்படும். இனபந்துக்களால் உதவி கிடைக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்க இடமுண்டு. பணவருவாய் திருப்திகரமாக இருக்கும்.

தேக சுகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

மங்கள வாழ்வை விரும்புவோர் நன்மையடைவர். உத்தியோகத்தர்கள் செல்வாக்குடன் பணியாற்றுவர். பதவி உயர்வும், ஊதியமும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் வளர்ச்சியடையும். ஆடம் பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடியலாபம் பெறுவர்.

தனித் தொழலில் ஈடுபட்டுள்ளோருக்கும் முன்னேற்றம் கிட்டும்.

மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், முன்னேற்றமும் பெறுவர்.

### கன்னி


*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை சுமாராக இருக்கும். பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். சில சந்தர்ப்பங்களில் அலைச்சலைத் தவிர்க்கமுடியாமல் இருக்கும். தேக சுகம் சிறிது பாதிக்கப்படலாம். எனினும் வைத்தியச் செலவு ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்குச் செய்கருமம் திருப்தியாக இருக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு முதலீட்டுக்கு ஏற்ப லாபத்தை எதிர்பார்க்க முடியாது. விற்பனை கூடிக் குறைந்து வரும். லாபமும் அப்படியே. தனித்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் முன்னேற்றம் காண்பர். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய முயற்சி தேவை.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகளும் தலைதூக்கும். பணவருவாய் இருந்தாலும், செலவுகளும் குறைவில்லாமல் இருக்கும். எண்ணிய கருமங்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். இனபந்துக்களின் உதவியுண்டு. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்குக் காரியாலயத்தில் செல்வாக்குக் குறையும். சகாக்களின் உதவி குன்றும். அதிகாரிகளும் கடுமையாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். எதிர்பார்த்தலாபம் கிடையாது. தனித்தொழில் செய்வோருக்குப் பிரயாசைக்கேற்ப லாபம் கிடைக்கும். மாணவர்கள் விளையாட்டில் கூடிய கவனம் செலுத்துவர். பரீட்சையில் சித்தி சுமாராக இருக்கும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனு'ம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும. முன்பிருந்த பணக்கஷ்டங்கள் நீங்கும. நினைத்த கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. புத்திரர்களால் நற்பலன்கள் உண்டு. வீட்டில் சுப கருமங்கள் நடக்கும். விவாகப் பேச்சுக்கள் சுமுகமாக நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவி கிட்டும். சகாக்களும் வேண்டிய நேரங்களில் உதவுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தனித்தொழில் செய்வோருக்கு தொழில் வளர்ச்சியடையும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், சித்திகளும் வேலைவாய்ப்புகள் கிட்டும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியினருக்கு இவ்வாரம் இல்லறம் நல்லறமாக அமையும். நண்பர்கள் உறவினர்களுடன் ஐக்கியம் கூடுதலாக இருக்கும். புத்திரர்களால் நற்செய்தி கிட்டும். பணவருவாய் சிக்கல்களைக் கொடுக்காது. தொடங்கிய கருமங்கள் சிறப்பாக நிறைவுபெறும். திருமணப் பேச்சுக்கள் நன்மை தரும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்ந்த நன்மைகள் கிட்டும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். வர்த்தகர்களுக்குப் பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்கும் தனித்தொழில் செய்வோர் தொழிலை விருத்திசெய்ய வாய்ப்புகள் கிட்டும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் உண்டாகும். பிரயாண வசதிகளும் சிலருக்கு ஏற்படும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரருக்கு குடும்ப நிலை நன்றாயிருப்பினும் இடையிடையே சச்சரவுகள் காட்டும். புத்திரர்களால் செலவு அதிகரிக்கும். எல்லாவற்றிலும் கூடிய முயற்சி தேவை. சில சந்தர்ப்பங்களில் தேகசுகமும் பாதிக்கக்கூடும். திருமணங்கள் காலதாமதத்தின்பின் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளுவும், சிரமங்களும் தோன்றும். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பங்கு வியாபாரம் சர்ச்சைகளை உண்டு பண்ணும். தனித்தொழில் விருத்தி குறையும். மாணவர்களுக்கு கல்வியில் சாதாரண முன்னேற்றமுண்டு.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் அமைதி குன்றும். பணவருவாய் போதியதாக இராது தேவைபற்ற கொண்டாட்டங்களைத் தவிர்த்தல் நன்று. வழிபாடுகள் நிம்மதியைத் தரும். தேகசுகம் குடும்ப சுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவும் அதிகமாகும. திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தர்கள் பலவித பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். அதிகாரிகளும் ஏறுமாறாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தனித்தொழில்கள் போட்டி பொறாமையால் மந்த நிலை காட்டும். மாணவர்களுக்குப் பாடங்கள் கசப்பாக இருக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீன ராசிக்காரருக்கு வாழ்க்கை இனிமையாக நடக்கும். குடும்பத்தில் அந்நியோன்ய உறவு சிறக்கும். புத்திரர்களால் நன்மைகள் கிடைக்கும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். இன பந்துக்களின் வருகையால் வீடு கல கலப்பாக இருக்கும். விவாகப் பேச்சுக்கள் நன்மையான பலனைத்தரும். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்ச்சி கிட்டும். அதிகாரிகளின் பாராட்டுக்களும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நல்ல முறையில் நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். வங்கி உதவிகளும் கிட்டும். தனித்தொழில் புரிவோர் நல்ல முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் விடாமுயற்சியால் சிறப்பாக முன்னேறுவர். சிலருக்கு வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு உண்டு.

# தவக்கால நற்சிந்தனை



"உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"

*(மத் 22:40)*

ஒரு அருட்சகோதரி தொழுநோயாளர் இல்லத்தில் ஒருவரின் சிதைந்து போன காலைத்தன்மடிமீது வைத்து காயத்தை கழுவிச்சுத்தம் செய்து கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற ஒருவர் முகம் சுழித்துக்கொண்டு எனக்குப் பத்தாயிரம் ரூபா தந்தாலும் கூட, நீங்கள் செய்கின்ற இந்த வேலையைச் செய்யவே மாட்டேன் என்றாராம். அதற்கு அந்தச் சகோதரி எனக்குப் பத்து லட்சம் ரூபா தருவதாகக் கூறினாலும், நான் இதனைச் செய்யவே மாட்டேன். ஆனால் நான் இதனை என் இயேசுவுக்காகச் செய்கிறேன். என்றாராம். அருட் சகோதரி கூறியதைக் கேட்டவர் - அதிர்ந்து போனாராம். கிறிஸ்தவத்தின் உள்ளார்ந்த ஆன்மீகம் இதனைத் தான் இன்றும் உலகுக்குப் பறை சாத்திக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், இயேசு செய்த மாபெரும் புரட்சி அதுதான். இன்றைக்கு அகில உலகிலும் நம் நிறுவனங்கள் நடத்தும் முதியோர் இல்லங்கள், அநாதை விடுதிகள். மன நலக் காப்பகங்கள் அனைத்தும் இவற்றுக்குச் சான்றுகள். இறை, பிறரன்பை எண்ணி வாழ்வோம்.

மோ.தார்சீசியஸ்

# சீனாவில் பஸ்ஸில் குண்டுவெடிப்பு

# முப்பது பயணிகள் பலி; பலர் காயம்

சீனாவின் சியாங்கி மாகாணத்தில் பயணிகள் பஸ்ஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 30 பேர் உடல் சிதறிப் பலியாகினர். பலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம்தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் ஹொங்ஹொங்கை அண்மித்த ஷென்செங் நகரிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பஸ் ஒன்று ஜிஜியாங் மாகாணத்திற்கு சென்று கொண்டிருந்தது. குறித்த பஸ் சியாங்கி மாகாணத்தில் சென்று கொண்டிருந்தவேளை பஸ்ஸில்திருட்டுத்தனமாக ஒருவர் கொண்டுவந்த வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. இதனால் பஸ்ஸிலிருந்த பயணிகளில் 30பேர் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியானதுடன் மேலும் பலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கும் தீவிரவாதிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் சட்டவிரோதமாக வெடிமருந்துகளை பதுக்கி வைப்பதுடன், அனுமதி பெறப்படாது வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுவதாலும் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் வெடிமருந்துகள் வீடொன்றினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தவேளை வெடிமருந்தை பதுக்கிவைத்தவர் உட்பட அந்த வீட்டிற்கு அருகிலிருந்த பாலர் பாடசாலையின் மாணவர் கள் 20 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் சென்றவேளை

# ஆப்கானில் குண்டுவெடிப்பு ஐவர் பலி; 30 பேர் காயம்!



ஆப்கானின் கந்தகார் மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஐவர் கொல்லப்பட்டதுடன் 30பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் இரண்டு பெண்களும், ஒரு குழந்தையும் உள்ளடங்குவதாக கந்தகார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வீதியோரமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலை எவ்வித சந்தேகமுமில்லாமல் தலிபான்களே மேற்கொண்டுள்ளனர் என கந்தகார் பொலிஸ் அதிகாரி கான் மொகமட் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தை அமெரிக்க மற்றும் ஆப்கான் படைகள் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோ லீசா மூதன் முறையாக நேற்று ஆப்கானுக்கு குறுகிய கால விஜய் மொன்றை மேற்கொண்டுள்ளார். இவ்வாறு சென்ற அவர், ஆப்கானின் மீள் கட்டுமானம், போதைப்பொருள் தடுப்பு போன்றவை தொடர்பாக ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

தனது எட்டுநாள் விஜயத்தில் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு ஏற்கனவே சென்றுள்ள கொண்டோலீசா, இஸ்லாமாபாத்திலிருந்தே, ஆப்கானுக்கு குறுகிய கால விஜயத்தை மேற்கொண்டார்.

ஆப்கானில் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், மேலதிக பேச்சுக்களை நடத்துவதற்காக, மீண்டும் நேற்று கொண்டோ லீசா, பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளார்.

## பாகிஸ்தான் படையினரின்

# முற்றுகையிலிருந்து தப்பிய பின்லேடன்

பாகிஸ்தான் படையினர் 10 மாதங்களுக்கு முன் ஆப்கான் எல்லைப் பகுதியில் அல்கொய்டா தலைவர் ஒசாமா பின்லேடனைச் சுற்றி வளைத்தனர். அதன் பிறகு அவரது இருப்பிடம் தெரியவில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில் - பாகிஸ்தான் படைகளிடம் பிடிபட்ட அல்கொய்டா தீவிரவாதிகளிடம் நடத்திய விசாரணை மற்றும் நுணுக்கமான தகவல் அடிப்படையில் ஒசாமா பின்லேடனைத் தேடும் வேட்டை நடந்தது. 10 மாதங்களுக்கு முன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் அவரைச் சுற்றி வளைத்து படைகள் நெருங்கின. அதன் பிறகு இருப்பிடம் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

ஆப்கான் எல்லைப்பகுதியில் பழங்குடி இனத்தவர் வசிக்கும் மலைப்பகுதியில் அவர் பதுங்கி இருக்கலாம் என பாதுகாப்பு நிபுணர்கள் சிலர் தெரிவித்தனர். அங்கு நடந்த தேடுதல் வேட்டையில் 10 பேரைப் பிடித்து விசாரணை நடப்பதாக அரசு அதிகாரிகள் கூறினர். கடந்த வாரம் வெளிநாட்டைச் சேர்ந்த இரு அல்கொய்டா தீவிரவாதிகளை பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.



கடந்த ஆண்டில் தெற்கு வசீரிஸ்தான் பகுதியில் அல்கொய்டா தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு உதவிய பலரை பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். பலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் மலைப்பகுதிகளில் பதுங்கி உள்ளனர் என அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இரட்டைத் தலையுடன் பிறந்துள்ள ஆட்டுக்குட்டி



தமிழ்நாடு சென்னிமலை அருகே ஆடு ஒன்று இரட்டைத் தலையுடன் குட்டி ஈன்றுள்ளது.

சென்னிமலை அருகிலுள்ள சில்லாங்காடு வலசு கிராமத்தைச் சேர்ந்த தேவராஜ் (வயது39), நெசவுத் தொழில் செய்துவரும் இவர் மேலதிக வருமானத்துக்காக வீட்டில் ஆடுகளை வளர்த்து வருகிறார். அவரது பண்ணையில் உள்ள ஓர் ஆடு நேற்றுமுன்தினம் காலை 3 குட்டிகள் ஈன்றது.

அதில் இரு குட்டிகள் வழக்கமான உருவத்துடன் உள்ளன. கடா குட்டியான மற்றொன்று இரட்டைத் தலையுடன் உள்ளது. மூன்று குட்டிகளுமே உயிருடன், நலமாக உள்ளன.

இரட்டைத் தலையுடன் உள்ள குட்டியின் தலைகள் இரண்டும் ஒட்டிய நிலையில் உள்ளன. 2 காதுகள், 4 கண்கள், 2 வாய்கள் உள்ளன. தாயின் மடியிலிருந்து இரண்டு வாய் மூலமும் பால் குடிக்கிறது.

குட்டி கத்தும்போது இரண்டு வாயிலிருந்தும் ஒரே நேரத்தில் சத்தம் வருகிறது. ஆனால், அந்தக் குட்டியால் எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியவில்லை.

## உலக நோக்கு

## இந்தோனேஷியாவில் மீண்டும் பாரிய பூகம்பம் ஏற்படலாம்

# நிபுணர்கள் எச்சரிக்கை

இந்தோனேஷியாவில் மீண்டும் பாரியளவில் பூகம்பம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக பூகம்பவியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஏற்பட்ட பூகம்பத்தின் தொடர்ச்சியாகவே இந்த பூகம்பமும் ஏற்படுமெனவும், இது இந்தோனேஷியாவின் பண்டா ஆசி பகுதியில் மையம் கொண்டிருக்குமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் ஏற்படுமென எதிர்பார்க்கப்படும் இந்த பூகம்பம் 7.5 முதல் 8.5 ரிக்டர் அளவு வரை இருக்குமெனவும், இது சுனாமி பேரலைகளையும், ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களை கொண்டுள்ளதாகவும், நிபுணர்கள் தெரிவித்தனர்.

எனினும், இந்தப் பூகம்பம் எப்போது ஏற்படுமென திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும், மிக விரைவில் இந்தப் பூகம்பம் ஏற்படுமென இங்கிலாந்திலுள்ள அல்ஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜோன் மெக் குளோஸ்கி தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் விமானம் தீப்பற்றியதில் 29 பயணிகள் பலி; 23பேர் காயம்!




ரஷ்யாவில் பயணிகள் விமானமொன்று பறப்பில் ஈடுபட்டிருந்த வேளை, இடை நடுவில் பற்றிய தீயினால் 29பேர் பலியானதுடன், 23 பேர் தீக்காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலிருந்து ஏ.என் 24 ரக விமானம் எண்ணை நிறுவன ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் விமான சிப்பந்திகள் உட்பட 52பேரை ஏற்றிக்கொண்டு வட பகுதி நோக்கி பறப்பை மேற் கொண்டி ருந்தது.

மொஸ்கோவிலிருந்து 1000 கி.மீற்றருக்கப்பாலுள்ள வராண்டி பகுதியில் பறப்பினை மேற்கொண்டிருந்தவேளை, அதன் இயந்திரப் பகுதியில் திடீரென கோளாறு ஏற்பட்டது. இதனையடுத்து விமானத்தில் தீப்பற்றிக் கொண்டது. விமானத்தை, விமான ஓட்டி அவசர, அவசரமாக தரையிறக்க முயன்றபோதும், அதற்குள்ளாகவே விமானம் தரையில் மோதி நொருங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்தவர்களில் 29 பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்ததுடன், ஏனையோர் தீக்காயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தனர். இந்த விபத்துச் சம்பவத்தை கேள்வியுற்றதும் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீக்காயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்த விபத்து சதிவேலை காரணமாக இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான ஏ.என் 24 ரக விமானம் 1960 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இதே ரகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விமானங்கள் ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகளில் பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஹொண்டுரா நாட்டின் சான் பெட்ரோ நகரில் ஒரு பெண்ணுக்கு இரட்டை குழந்தை பிறந்தது. இந்த 2 பெண் குழந்தைகளின் உடல் ஒன்றுக்கொன்று ஒட்டியே பிறந்தன. அமெரிக்காவின் கிளிவ்லேண்ட் ஆஸ்பத்திரியில் இந்தக் குழந்தைகளை பிரிக்க சத்திரசிகிச்சை நடைபெற்று வருகிறது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

## நகர அபிவிருத்தி அமைச்சில்

நகர அபிவிருத்தி நீர்வழங்கல் அமைச்சில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக அவ்வப்பதவிக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

அபிவிருத்தி உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 24, கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

திட்டமிடல் உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 12, கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞானம், புள்ளி விபரவியல், முகாமைத்துவம், விலை மதிப்பீடு என்பனவற்றில் ஒரு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 4, கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து தகவல் தொழில்நுட்பம், கணினிப்பொறியியல் என்பவற்றுள் ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சட்ட உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 01, கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டமாணி பட்டம் பெற்றிருத்தல்.

பொறியியல் உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை - 01; கல்வித் தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இயந்திரப் பொறியியலில் விஞ்ஞானமானிப் பட்டம் ஒன்று பெற்றிருத்தல்.

வரவுசெலவுத்திட்ட உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 01, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவ, வியாபார, வர்த்தகமாணி பட்டம் பெற்றிருத்தல்.

வழங்கல் உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 01, கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வியாபாரம், முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம் என்பனவற்றில் பட்டம் பெற்றிருத்தல்.

முகாமைத்துவ உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 04, கணக்கியல் உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 02, போக்குவரத்து உதவியாளர் 01, கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவ வியாபார, வர்த்தக, பட்டங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 2005.03.03 முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், நகர அபிவிருத்தி நீர்வழங்கல் அமைச்சு, 3வது மாடி செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## அபிவிருத்தி உதவியாளர்

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருப்பதுடன் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு முறை நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் நடைபெறுவதுடன் நியமனம் மூன்றுவருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். விண்ணப்பதாரி 2005-3-31 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு, இலக்கம் 330 யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

## நிதிச்சேவை அதிகாரி

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சேவையில் உள்ள நிதிப் பிரிவு நிறைவேற்றுநர் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக முழுத்தகுதி பெற்ற கணக்காளர் நிறுவனம் அல்லது இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் அல்லது முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவன இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும் உள்ளதுடன் கணினிகளை கையாள்வதில் நடைமுறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை தயாரிக்கும் போது இரு பிரமுகர்களின் பெயர் முகவரி என்பவற்றை குறிப்பிடுவதுடன் 2005 -03-22 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 109 ரொட்டுண்டா டவர் கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் கருத்துக்கணிப்புக்கோ தேர்தலுக்கோ அஞ்சவில்லை!

## சோமவன்ச அமரசிங்க உரை

மக்கள் தம்முடன் இருப்பதால் - கருத்துக் கணிப்புக்கோ, தேர்தலுக்கோ தாம் தயாராக இருப்பதாக - ஜே. வி.பி தலைவர் சேமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் கொழும்பு மாவட்ட அதிகார சபைக் கூட்டத்தில் பங்கு பற்றி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜே.வி.பி. நீண்ட பயணம் வந்துள்ள கட்சி. இன்று இந்தக் கட்சி மிகப் பெரிய வெற்றியைக் கண்டுள்ளது. பல அர்ப்பணிப்புகளைச் செய்தே இந்த நீண்ட பயணத்தில் வந்தோம். இந்த அர்ப்பணிப்புகளுக்குள் எங்கள் கட்சி அங்கத்தவர்கள் தமது வாழ்க்கையைக்கூட அர்ப்பணிப்புச் செய்துள்ளனர்.

இந்தக் கட்சி மற்றைய கட்சிகளைப்போல இரண்டு பக்கமும் வளையமாட்டாது. நாங்கள் ஒரு நிலைப்பாட்டில், ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே இந்தப் பயணத்தில் ஈடுபட்டுள்ளோம். அந்த நோக்கம்தான் இந்த நாட்டின் ஒருமைப்பாடு, நாட்டின் முன்னேற்றம், சமாதானம் இவை அனைத்தும் எங்கள் பயணத்தில் உள்ளன.

இந்தக் கட்சி நல்ல தலைவர்களைத் தோற்றுவித்திருப்பது - மற்றைய கட்சிகளுக்கு முன்மாதிரியான கட்சியாகும்.

நாட்டைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விரும்புவாரேயாயின் - நாட்டைப் பாதுகாப்பதற்கு கூட்டணி அரசியலில் இருந்து விலகிச் செல்வதே ஒரேவழி. நாங்கள் அதனைச் செய்வோம். மக்கள் எங்களுக்கு வாக்களித்தது நாட்டைக் கட்டி எழுப்புவதற்குத்தான். ஆகையால் கூட்டணி அரசில் இருந்து விலகமாட்டோம்.

ஆனால், கூட்டணி ஒப்பந்தத்தைச் சீர்திருத்த முடியாதவிதமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைத்துப் போடுமாயின் கூட்டணி அரசில் இருந்து விலகுவோம்.

உண்மையாக கூட்டமைப்பு அரசு உடைந்த பின்பு நாங்கள் ஆட்சிக்கு வரமுடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நினைக்குமாயின், அது என்றைக்குமே நிகழமாட்டாது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் என்றைக்குமே ஆட்சிக்கு வரமுடியாது.

நாட்டை ஒன்றிணைந்த தலைமைத்துவத்தின்கீழ் கட்டியெழுப்புவதற்கான காலம் எழுந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நிவாரண மோசடிசெய்த நபருக்கு சிறைத்தண்டனை!

(திருகோணமலை)

உலக உணவுத்திட்டத்தால் பொது மக்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட நிவாரணப் பொருட்களை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் பதுக்கிவைத்திருந்து மோசடி செய்த குற்றச்சாட்டின்பேரில் கோமரங்கடவையைச் சேர்ந்த எஸ்.பி குணதிலக என்பவருக்கு திருகோணமலை நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா ஆறு மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன், 6 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர் நிவாரணம் வழங்குவதற்காக வழங்கப்பட்ட பொருட்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்காமல் கூட்டுறவுச் சங்க லொறியில் பாழடைந்த வீடு ஒன்றுக்கு கொண்டுசென்று பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது- நிவாரணப் பொருட்கள் மோசடி பாரதூரமான குற்றம் எனத் தெரிவித்தே நீதிவான் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

# போர்நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராக தாக்கல் செய்த மனுவை திலக் கருணாரட்ண வாபஸ்

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்யுமாறு கோரி - மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுவை திலக் கருணாரட்ண வாபஸ் பெற்றுள்ளார்.

சிஹல உறுமயவின் தலைவராக இருந்தபோது தாக்கல்செய்த மனுவை திலக் கருணாரட்ண நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டார்.

இவர் தற்சமயம் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் - முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்ய வேண்டுமெனக் கோரும் மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜே.வி.பி, சிங்கள ஜாதிக சங்கம், சிஹல உறுமய உட்பட்ட கட்சிகள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தன. நேற்று இந்த மனுவை விசாரணைக்கு அழைக்கப்பட்ட வேளையில், இதில் பிரதிவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் ஏனையோரும் எதிர்வரும் 28 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

# சட்டவிரோத குடியிருப்புகள் விளான்குளத்தில் அகற்றப்பட்டன!

(திருகோணமலை)

திருகோணமலை-விளான்குளம் பௌத்த விகாரைக்கு அருகாமையில் சட்டவிரோதமான முறையில் பௌத்த பேரினவாதிகளினால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களை பொலிஸார் நேற்று முன்தினம் அகற்றினர்.

சுனாமியால் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கான குடியருப்புக்கள் எனக்கூறி குறிப்பிட்ட இடத்தில் 15 குடிசைகள் அமைக்கப்பட்டன.

இது தொடர்பாக திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை அண்மையில் நடத்திய மறியல் போராட்டத்தின்போது, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில ஜெயசேகரவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தச் சட்டவிரோத குடிசைகளை பொலிஸார் அகற்றிய சமயம் குடியிருப்பாளர்களுக்கும் - பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதற்கு ஆட்சேபனை தெரிவித்து விளான்குளம் பௌத்த விகாராதிபதி ரொட்டாவே நந்தரத்னதேரோ மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## பொதுமக்களை அடையாளம் காட்டுமாறு கிராம சேவகர்களுக்கு பணிப்பு

மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்ட பொதுமக்களை - பொலிஸ் விசாரணைகளில் அடையாளம் காட்டுமாறு அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம், 11 கிராம சேவை அலுவலகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஆயுதக்குழு...

வர் அடையாளம் காட்டியதாக மாறுபட்ட கருத்தை வெளியிட்டனர்.

இவரது சடலம் இதுவரை எவராலும் பொறுப்பேற்கப்படாததையடுத்து பொலநறுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இணுவில்...

வருவதாவது -

படுகாயமடைந்த இருவரும் கடை ஒன்றிற்கு சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே - மது போதையில் மோட்டர் சைக்கிள் செலுத்திவந்த நபர் இவர்கள் மீது மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. காயமடைந்த இருவரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகினறனர்.

## உலகவங்கி...

இந்தச் சந்திப்பின்போது வடக்கு - கிழக்கு குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கு விளக்கமளிக்கவேண்டி ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிற து.

பீற்றர் ஹரோல்ட்டின் கருத்துக் குறித்து தமது கடும் எதிர்ப்பை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே. வி.பி உள்ளிட்ட பல தேசியவாதக் கட்சிகள் வெளிப்படுத்தியதோடு, உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியை நாட்டைவிட்டுவெளியேறுமாறும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## ஏவுகணைகளை...

யப்பட்டுள்ளன என்பது தொடர்பாக இதுவரை தகவல்கள் வெளிவரவில்லை.

ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட நிரந்தர இறக்கைகள் கொண்ட இலகுரக விமானங்களைக் கண்டறிந்து தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை இலங்கைக்கு செக். குடியரசு வழங்கத் தயாராகவுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த ஏவுகணைகளின் முழுமையான விபரங்களை வெளியிட முடியாது என மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எம் 53 ரக 30 எம்.எம் வகை விமான எதிர்ப்பு பீரங்கிகளை உற்பத்தி செய்து வரும் செக். குடியரசு - அவற்றையே இலங்கைக்கு வழங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. வாகனங்களில் பொருத்தி இயக்கக் கூடிய இந்த விமான எதிர்ப்புப் பிரங்கிகள் 1000 மீற்றர் முதல் 3000 மீற்றர் வரையில் உள்ள இலக்கினை தாக்கியழிக்கும் தன்மையுடையது என அறி விக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் இந்த வகையான விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இருப்பதாக ஏற்கனவே இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிடந்தக்கது.

## பொதுக்கட்ட...

தயாரிப்பதெனவும் தீர்மானித்துள்ளோம். உதாரணமாக அரிசி நிவாரணப் பொருளாக அனுப்பப்பட்டால் அதனை அனுமதிக்கமாட்டோம். ஏனெனில் உள்நாட்டிலேயே பாரிய அளவிலான அரிசி அறுவடை செய்யப்படுகிறது.

இவற்றை விட துறைமுகங்களில் நடைமுறைத் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. ஏனெனில் - எமது துறைமுகங்கள் இத்தகைய பாரிய கொன்ரெயினர்களைக் கையாள்வதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்படவில்லை. மேலும் சுங்க அதிகாரிகளும் குறைந்தளவிலேயே உள்ளனர். எனவேதான் இந்தத் தாமதம் ஏற்படுகிறது.

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் பெருமளவில் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. எனினும் இதில் தாமதம் எதுவுமில்லை. ஆனாலும் இந்த ஒப்பந்தம் எப்போது கைச்சாத்திடப்படுமென சொல்லமுடியாததுடன் இது குறித்த விபரங்களையும் தற்போது கூறமுடியாதெனவும் தெரிவித்தார்.

## நிதியுதவிகள் குறித்து

# பொறுப்பற்ற தனமாக சந்திரிகா நடக்கிறார்!

## ஐ.தே.க விசனம்

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமானப் பணிக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வித நிதியுதவியும் கிடைக்கவில்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தமை தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அந்தக் கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான புனரமைப்புப் பணிகளுக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வித நிதியுதவிகளும் கிடைக்கவில்லையென ஜனாதிபதி தெரிவித்தமை எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், நிதியமைச்சின் செயலாளர் டி.பி.ஜயசுந்தர - உதவிப் பணிகளுக்காக வெளிநாடுகள் வழங்கிய நிதியுதவிகள் தொடர்பாக வேறுபட்ட கணக்கை காட்டுகின்றார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இவர் தெரிவிக்கையில் - 700 மில்லியன் நிதியுதவி கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார். இந்த நிதியுதவி வெளிநாடுகள் வாக்குறுதி யளித்தவையல்ல. அரசாங்கம் உதவியாக பெற்றுக்கொண்டவையாகும்.

எனவே வழங்கப்பட்ட இந்த நிதியுதவி தொடர்பாகப் பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடாமல் பெறப்பட்ட இந்த பெருமளவு நிதியுதவி எவ்வாறு பயன்படுத்தப்படவுள்ளதென்பதையும், இந்த நிதியுதவி எவ்வாறு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளது, அதன்மூலம் நாட்டை எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பாக ஜனாதிபதி தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## செய்தியாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையில் - பரந்தன், கண்டாவளை, விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஸ்கந்தபுரம், முழங்காவில், மல்லாவி ஆகிய இடங்களுக்கான பிரதேச செய்தியா ளர்கள் தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை காலை 10 மணிக்கு - இல 152, ஏ9 வீதி, கிளிநொச்சியிலுள்ள கிளைப்பணிமனையில் நடைபெறும் நேர்முகத்தேர் வுக்கு சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குனர்

## அந்தியேட்டி அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 16.02.2005 அன்று சிவபதம் அடைந்த

**திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 17.03.2005 வியாழக்கிழமையும் சபிண்டீகரண கிரியை 18.03.2005 வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கும் அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தம்பகாமம்,
பளை.

C/3905

தகவல்
சு.நித்தியானந்தம்
(மகன்)

# க.பொ.த. உயர்தரம் மாதிரி வினாத்தாள் 2005

## மூன்று மணித்தியாலங்கள் தமிழ் I ஆசிரியர் – T.K. குகன்.

முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியில் உள்ளவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்கும் – எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து.
(அ) அவற்றின் பொருளைத் தற்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) தடித்த எழுத்திலுள்ள பகுதிகளின் சிறப்பைத் தெளிவாக விளக்குக.

(i) அறம் புரிந் தன்ன செங்கோனாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீன்
டுறை வேண்டு பொழுதிற் பெயல் பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடு திரள் கொண்மூ
மகா விசும்பி னடுவுநின் றாங்குக்
**கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை**
**வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய**
**குடிமறைப்பதுவே**

(ii) நிலத்திற் கிடந்தமை கால் காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர் நீர்ப்பர் மானம் வரின்.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ **நன்பால்**
**கலந்தீமை யாற்றிரிந் தற்று.**

அற்றாற்க்கொன் றாற்றாதான் செல்வ மிக நலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று

(iii) நோவது ஆக இவ் உலகை நோய் செய்த
பாவகாரியின் பிறந்த பாவியேன்
சாவது ஓர் கிலேன் தவம் செய்வேன் அலேன்
யாவான் ஆகி இப் பழிநின்று ஏறுவேன்

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும் பொங்கு அருள்
துறையின் நீங்கிய அறமும் தொல்லையோர்
**முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?**

(iv) **நோக்கிலஞு வொவ்வொன்று நூறாயிரங்கோடி**
**மாக்கயத்தின் சும்மை** மலிந்த பாவந்திரட்டி
ஆக்கு சிலுவை யமலன் சிரத்தேந்திக்
காக்கை கடனாக் கல்வாரி நோக்கினார்.

வள்ளல்கு ரு ராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளிய வதபித்த வெம்மான் சடுவேசன்
கொள்ளைபு விந்துகொ லைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ளரி ருவரொருங் கல்வாரி நோக்கினார்

02. அ) பின்வரும் கவிதையைப் படித்து அதன்கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

உதிர்ந்த மலர்கள்
முள்ளுடைச் சிறு செடியின் – கனவாய்
மூண்டு சிரித்த மலர்
கன்னெனும் பொக்கிஷத்தால் – விம்மியே
கர்வம் அடைந்தமலர்.

பனித்துளி மணிசூடித் – தென்றலின்
பாட்டினைக் கேட்டமலர்
கனிந்துள விண்ணதன் கீழ் – மௌனக்
கல்வியைக் கற்றமலர்.

அந்தச் சிவப்பினையும் – விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்டமலர் – மணமே
செய்து திளைத்த மலர்.

வீழ்ந்து கிடக்குதையோ – உச்சி
வெயிலிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை – மண்ணிலே
வரைந்துளதோ வண்டே?

(1) உதிர்வதன் முன் மலரின் கர்வத்தையும், அழகினையும் கவிஞர் எவ்வாறு கூறுகிறார்?

(2) உதிர்ந்த மலர் வாழ்க்கை பற்றிய எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்துகின்றது?

(3) இக்கவிதையில் மேலோங்கி நிற்கும் சுவையினை விளக்குக?

அல்லது

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக?

'இல்லை ஆயா; இந்தா நீ கொஞ்சம் சாணியைப் போட்டு அந்தச் சின்ன ஊட்டை மாத்திரம் வழிச்சிரு. இண்ணக்கு வெள்ளிக்கிழமையல்ல, நா பூராப்பத்துக்கிறே' என்றாள் நாகம்மாள். 'அப்புறம் சும்மா ரெண்டு சொம்பு தண்ணீல வழிச்சிட்டு கண்மூடி விழிப்பதற் குள்ளே வாயா. பருத்திக்காட்டுக்கு முன்னாலேயே போயிடலாம். தோட்டம் போறபோது செல்லீட்டுப் போனாங்க' என்றாள். ராமாயிக்கு ஒருபுறம் சந்தோசம் இந்த மாதிரி தன்னிடம் சந்தோசமாக நாகம்மாள் பேசி எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. கலியாணமான பத்தடியில் எவ்வளவோ கொஞ்சிக் குலாவி அன்பாக, ஆதரவாகப் பேசியிருக்கிறாள். அதற்குப் பிறகு அதுவும் சமீப காலத்தில் வீட்டில் ஒரே சண்டையும் சச்சரவும் தான். பழையபடி இன்று அந்த சிரித்த முகத்துடன் மிருது வசனத்தைக் கேட்ட அவளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இதிலிருந்து நாகம்மாள் எப்போதும் கடுகடுத்தவளாக இருக்கவில்லை என்பதும் விதரணை தெரிந்தவள்தான் என்பதும் விளங்கும். பொதுவாக எல்லோர் உள்ளத்திலும் இனிமையும், இளச்சமும், கனிவும் காதலும் பொங்கித்தான் நிற்கின்றது. சந்தர்ப்பபேதங்களால் சிலர் வேண்டும் என்றே இதயத்தை கடினமாக்கிக் கொள்கிறார்கள் போலும்!

இன்று நாகம்மாள் காட்டும் நயப்பெருக்கு வேறொரு காரணத்தைப் பற்றியது. பாம்புக்குட்டி புரண்டு விளையாட வந்தாலும் கொத்துவதைத் தவிர, வேறு எதற்காக இருக்க முடியும்!

1) உரைப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு நாகம்மாள் எனும் பாத்திரத்தின்குண வியல்புகளை விபரிக்குக?

2) ராமாயியினுடைய உள்ளத்தில் ஏற்பட்ட குதூகலத்திற்கு காரணம் யாது?

3) ஆசிரியர் கையாண்ட உரைநடைச் சிறப்பினை மதிப்பிடுக?

4) நாகம்மாளின் உள்ளக்கிடக்கை எவ்வாறு வெளிக்கொணரப்பட்டுள்ளது?

### பகுதி 02

03. மானம் எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) தாம் தாழ்வதற்கு ஏதுவானவற்றை செய்யாமையினால் வரும் சிறப்பு.

ஆ) உயர் குடிப் பிறந்தோர் வறுமை வந்தடைந்த போதும், தம் இயல்பினின்றும் வேறுபடாமை.

இ) மானத்தின் பொருட்டாய் இறப்பதன் சிறப்பு.

ஈ) வள்ளுவர் தாம் கருதியதை வலியுறுத்த உவமையணியினைக் கையாளும் திறன்.

04. 'தசரதன் விண்ணிடை அடைந்தனன்' என்ற செய்தியை பரதன் வாயிலாக இராமன் கேட்டது முதல் கலங்கிய இராமனைத் தேற்றும் வகையில் வசிட்டன் அறிவுரை கூறியவரையுள்ள பகுதியில்

அ) இராமனது நெடுந்துயர்

ஆ) தசரதனின் பெருமைகள்

இ) தந்தையின் இறப்புக்கு தானே காரணம் எனக் கூறி இராமன் துயருறல்

ஈ) உலகத்தியற்கை பற்றிய விளக்கம்
ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக?

05. இராஜநாயகம் கஃபத்துல்லாவின் குறுபான் கொடுத்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு

அ) கஃபத்துல்லாவின் சிறப்புகள்

ஆ) கஃபத்துல்லா அழுதமைக்கான காரணங்களும் அதற்கு ஆறுதல் தரும் வகையில் இறைவன் அளித்த பதில்களும்

இ) சுலைமான் நபி வாயிலாக வெளிப்படுத்தப்படும் முஹமது நபி அவர்களின் புகழ் ஆகியவை புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

06. கு.ப.இராஜகோபாலின் கனகாம்பரம் என்ற சிறுகதையில்

அ) பெண்ணின் மென்மையான மனநிலையை உணர்த்துவதாக இக்கதை அமைகிறது என்பதை விளக்குக?

ஆ) அவள்தான் உண்மையான பெண்! நான் சந்தித்த முதல் பெண் என்று சாரதாவைப்பற்றி இராமு எண்ணியதற்கான காரணம் யாது என்பதை விளக்குக?

இ) சாரதா பட்டண நாகரீகத்துக்கு ஏற்றபடி நடந்து கொண்டதை மணி பாராட்டத் தவறி விட்டான் இக் கூற்றினை மதிப்பிடுக?

ஈ) ஆண் பெண் உறவுகளுக்கு இடையிலான விரிசல்கள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?

07. பாரதியாரின் வெண்ணிலாவே எனும் கவிதையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக?

அ) பாரதி இயற்கை அழகில் கொண்டிருந்த ஈடுபாடு

ஆ) வெண்ணிலாவின் அழகை வெளிப்படுத்த கையாண்டுள்ள உத்திகள்

இ) வெண்ணிலாவின் மேலான தெய்வீகத்தன்மை

08. சி.என். அண்ணாத்துரையின் ஓய்வு நேரம் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு

அ) இக்கட்டுரைக்கு பின்னணியாக அமைந்தவை எவை?

ஆ) இக்கட்டுரை ஆசிரியரின் நோக்கத்தைக் குறிப்பிடுக?

இ) ஆசிரியர் கையாண்டுள்ள தமிழ் நடை பற்றி விளக்குக?

ஈ) ஓய்வின் உயர்வு பற்றி தொழிலாளரிடம் பேசுவது பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார்?

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விபரிக்குக?

அ) சிலப்பதிகாரம் 'வழக்குரை காதையிலே' மன்னனிருக்கும் இடம் நோக்கி கோப்பெருந்தேவி சென்ற காட்சி

ஆ) காட்டின் வெம்மையினை உணர்த்தக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் கையாளும் உவமைகள்

இ) இரட்சணிய சரிதப் படலத்தில் கல்வாரி மலை நோக்கி செல்வது கண்டு துயருற்ற பெண்களுக்கு யேசுபிரான் கூறிய ஆறுதல்

ஈ) 'எந்தையும் தாயும்' என்ற கவிதையில் பாரதியின் நாட்டுப்பற்று

உ) 'பண்பாடு' எனும் கட்டுரையில் இராஜாஜி கூறும் தனி மனிதப் பண்பாட்டுக்கும், சமூக பண்பாட்டுக்கும் இடையி லான வேறுபாடுகள்

# க.பொ.த. உயர்தரம் மாதிரி வினாத்தாள் 2005

மூன்று மணித்தியாலங்கள்

## தமிழ் II

ஆசிரியர் - T.K. குகன்.

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும், இரண்டாம் மூன்றாம் பகுதி களிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் உள்ளிட்டு, மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடைதருக.

### பகுதி 1

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக?

அ) பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தமிழ்ப்பணிகள்.

ஆ) இலக்கியமும், சமூகமும் .

இ) விஞ்ஞானமும், விண்வெளி ஆய்வுகளும்.

ஈ) தமிழில் குழந்தை இலக்கியம்.

உ) தாய் மொழியில் உயர்தரக்கல்வி.

ஊ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

02. பின்வரும் ( அ ) உரைப்பகுதியையும் ( ஆ ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?

அ) நமது கவிதைகளிலே ஆனந்தம் குறையத் தொடங்கியது. ருசி குறைந்தது. கரடுமுரடான கல்லும், கள்ளி முள்ளும் போன்ற பாதை நம் கவி களுக்கு நல்ல பாதையாக தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரசம் குறைந்தது சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது பின்னர் திறமைகள் அதிகப்பட்டன. 'கவியுறத் தெழிந்து தண்ணென்றொழுக்கந் தழுவிச் சான்றோர் கவியெனக்கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்' என்று கம்பன்பாடியிருக்கிறான். 'சாவி' என்பது 'ஒளி'. இது வடசொல் கம்பன் காலத்தில் இது அதிக வழக்கிலிருந்தது போலும் ஒளி பொருந்தும் படி தெளிவு கொண்டதாகி தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய வாதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

1) இப்பகுதியில் ஆசிரியர் கூறியவற்றை உமது நடையில் 20 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக?

2) உண்மையான கவிதைகள் ஏன் தோன்றவில்லை என ஆசிரியர் கூறுகிறார்?

3) தான் கூறவந்த கருத்தை ஆசிரியர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

ஆ) பிறர்மனையின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிக்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

1) இச் செய்யுள் கூறும் கருத்தை உமது உரைநடையில் 30 சொற்களுக்கு குறையாமல் எழுதுக?

2) இச்செய்யுளின் சிறப்பம்சங்கள் யாவை?

03. கீழ்வரும் பதினைந்து வினாக்களும் (அ) (ஆ) (இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமிருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாவையேனும் தெரிந்து, எல்லாமாக பத்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

அ)

1) கரவு, வரகு, ஆடு, குரு இவற்றுள் குற்றியலுகரம் இடம்பெறும் சொற் களைக் குறிப்பிடுக?

2) குருவி + கூடு இச் சொற்கள் இயல்பாகவும், விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக?

3) தெய்வம் தொழாஅள் இதிலுள்ள சார்பு எழுத்துக்களை அவற்றின் வகை சுட்டி எழுதுக?

4) வாட்டடங்கண் ணழகியவடானே யென்றேன் இதனைச் சந்திபிரித்து எழுதுக?

5) தொடங்கினான் இதனைப் பகுத்துக் காட்டுக?

(ஆ)

6) முறி ஓடி ஆகியவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும், செயற் படுபொருள் குன்றாதவினைகளாகவும் வரும் வகையில் வாக்கி யங்களை எழுதுக?

7) கல்வியிற் பெரியன் கம்பன். பாம்புக்குப் பகை கருடன்இவ்விரு தொடர்களிலுமுள்ள வேற்றுமை உருபு யாது?
இவ்வாக்கியங்களில் அது எவ்வெப் பொருள்களில் வந்துள்ளது?

8) கார்மேகம், விரைநடை, தாழப்பறந்தது, செங்கால் நாரை இவற்றுள் பெய ரடைகளைக் குறிப்பிடுக ?

9) கந்தா வா, கந்தா வாழிய இவ்விரு வினைகளிலும் இடம் பெறும் வினை கள் எவ்வகையைச் சார்ந்தன?

10) நிலவைக் காட்டினாள்
காட்டுவேனா
நடித்துக் காட்டினான்
பாடிக் காட்டினர்

இவற்றுள் காட்டு என்பது துணை வினையாக வந்த தொடர்கள் எவை?

(இ)

11) கல்வியிற் பெரியன் கம்பனே இதில் ஏ என்ன பொருளில் வந்துள்ளது?

12) மறப்பினும் ஒத்துக் கொளலாகும் இதில் உம் என்ன பொருளில் வந் துள்ளது?

13) விரிகதிர், பிறை நுதல், இன்சொல், கவிக்கு இலக்கணம் இவை ஒவ் வொன்றும் என்ன தொகைகள் எனக் குறிப்பிடுக?

14) உருத்திகளும் இத் தொடரினை இரு பொருள் தரக்கூடியதாக பிரித்து எழுதுக?

15) பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலையால் கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டன. இவ்வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை சுட்டிக் காட்டி திருத்தி எழுதுக?

### பகுதி 2

04. அ) சங்ககால அகத்திணை இலக்கியங்கள் கூறும் பொருள் மரபினை விளக்குக?

ஆ) பல்லவர் கால இலக்கிய வளர்ச்சிக்கு சங்ககால அகத்திணை பொருள் மரபு எவ்வெவ் வகைகளில் உதவியது என்பதை எடுத்துக் காட்டுக?

05. அ) விஜயநகர நாயக்கர் கால இலக்கியங்களின் முக்கிய பண்புகளை விளக்குக?

ஆ) அக்கால இலக்கியப் பண்புகளுக்கும், சோழப்பெரு மன்னர்கால இலக் கியப் பண்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகள் யாவை?

06. அ) ஆரம்பகால தமிழ் நாவல்களின் பொதுப்பண்புகளை விளக்கிக் கூறுக?

ஆ) தமிழ் நாவல் வளர்ச்சியில் கல்கி பெறும் இடத்தினை மதிப்பிடுக?

### பகுதி 3

07. அ) யாழ்ப்பாணத்து அரசகாலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப் படுத்துக?

ஆ) அவற்றின் முக்கிய பண்புகளை விளக்குக?

08. அ) ஆரம்ப காலத்திலிருந்து இற்றை வரையான ஈழத்து நாடக வளர்ச் சியினை துலக்குக?

ஆ) ஈழத்து தமிழ் நாடக இலக்கியத்துறையில் பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை ஏற்படுத்திய முக்கிய மாற்றங்களை ஆராய்க?

09. மேல் வருவோர் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக?

அ) பாவலர் துரையப்பாபிள்ளை

ஆ) மாதகல் மயில்வாகனப் புலவர்

இ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

ஈ) தவத்திரு தனிநாயகம் அடிகள்

உ) யாழ்ப்பாணம் பதுறுதீன் புலவர்